Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-01 15-05-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 86

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்
T.P: 024-222 4247 (சி-11901)

# தெற்கில் பெரிய எதிர்ப்புப் போன்றதொரு தோற்றப்பாட்டை அரசு உருவாக்கியுள்ளது!

## அகாசியுடனான சந்திப்பின் பின் சு.ப. தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**பொதுக்கட்டமைப்பைப் பொறுத்தவரை எங்களுடைய தரப்பில் ஒரு பிரச்சினையும் இல்லை. ஏனெனில், நோர்வேத்தரப்பு தந்த ஆலோசனையை எங்களுடைய தலைமைப்பீடம் ஏற்கனவே ஏற்றுக் கொண்டு அங்கீகரித்துவிட்டது. ஆனால், இலங்கை அரசோ இதனை இழுத்தடித்து தெற்கிலே பெரிய எதிர்ப்புப்போல் ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கி அதைப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசியுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளருக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளில் மிக முக்கியமான நாடாக ஜப்பான் விளங்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை உருவாக்க சனாதிபதி சந்திரிகா தீர்மானம்?

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் கடல்கோள் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது என்று, சனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது ஏதேனும் தரப்புக்களிலிருந்து எதிர்ப்புக்கள் காட்டப்பட்டால், அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி அதனை ஒடுக்குவது என்றும், தேவையேற்படின் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அறியமுடிகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படாவிடில் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

### ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாசி

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளுக்கும் சர்வதேச நிவாரண உதவிகள் சென்றடைவதற்கான பொதுக்கட்டமைப்பை சிறிலங்கா அரசு உருவாக்காவிட்டால் மாற்று நடவடிக்கைகளை உதவி வழங்கும் நாடுகள் மேற்கொள்ளும் என்று ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாசி அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று மாலை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில; இலங்கைத் தீவகத்தில் அமைதி முயற்சிகள் வெற்றிபெற ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து தலதா மாளிகை முன் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்பு அமுல் செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நாளை திங்கட்கிழமை, கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் சத்தியாக் கிரகம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேசிய பிக்குகள் முன்னணி இதனை ஏற்பாடு செய்துள்ளது. கண்டியில் ஆரம்ப மாகவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டின் பெயரால், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பொதுக் கட்டமைப்பை பெற்றுக் கொடுப்ப தற்கு அரசு தயாராகி வருவதாக தேசிய பிக்குகள் முன்னணியின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினையைத் தீர்க்க முடியாதுவிடில் நாட்டை ரணிலிடம் ஒப்படைத்தால் என்ன?

### சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் சிபார்சு

(கொழும்பு)

நாட்டை எதிர்க்கட்சித் தலைவர் ரணிலிடம் ஒப்படைக்கும் யோசனை ஒன்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆலோசனை கூட்டம் ஒன்றில் முன்மொழியப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியை இணங்க வைக்கும் முயற்சி ஒன்று சனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.இதில் ஜே.வி.பியின் தலைவர்களும் சனாதிபதி தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட அமைச்சர்களும் பங்கேற்றனர்.

எனினும் அந்தப்பேச்சுவார்த்தையின் போது ஜே.வி.பியை இணங்கவைக்கும் முயற்சி தோற்றுப்போனது. இதனையடுத்து ஜே.வி.பியினர் சந்திப்பு முடி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் பலியானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆலையடிவேம்பு தர்மரட்ணம் வித்தியாலய மைதானத்திலுள்ள நலன்புரி முகாமில் வசித்துவந்த ஒருவர் கைக்குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.ஒரு பிள்ளையின் தந்தையான சுந்தரம்பிள்ளை (வயது-26) என்பவரே நேற்றுமுன்தினம் இரவு 12-10 மணியளவில் கொல்லப்பட்டுள்ளார்.

உறங்கிக்கொண்டிருக்கும் போது இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் காரணமாகவே இவர் கொல்லப்பட்டுள்ளார். இவர் சந்தி வெளியைச் சொந்த இடமாகவும், சின்ன முகத்துவாரத்தில் கடந்த நான்கு வருடங்களாக வசித்துவருபவர் என்றும் ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

## கண்டியில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கண்டியில் நாளை நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் பெருமளவு பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.இதேவேளை கூட்டத்தின் போது எதிர்ப்பு தெரிவித்து எவரா

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு செங்கலடியில் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்றுக் காலை இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.செங்கலடி சந்தியிலுள்ள சந்தைக்கு சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தவரை குறிவைத்து இந்தத் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. உந்துருளியில் வந்த இனந்தெரியாதவர்கள் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டுத்தப்பிச் சென்றுள்ளனர். துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் மட்டக்களப்பு இலுப்படிச்சேனையைச்- சேர்ந்த பொன்னம்பலம் தமிழ்வாணன் என இனம் காணப்பட்டுள்ளார். இவர்ஒரு குழந்தையின் தந்தையாவார். மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வரி விளம்பரம்

### தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

மருதநகர் பன்னங்கண்டி வட்டக்கச்சி பெரியபாலத்திற்கு அருகில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன் தென்னைநாற்று உற்பத்திப் பகுதியில் தென்னம்பிள்ளைகளை நேரடியாகத் தொடர்பு கொண்டோ அல்லது கிளிநொச்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட செயலகத்தில் தொடர்பு கொண்டோ பெற்றுக்கொள்ளலாம். (6127)

### மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செவ்வாய்க்குற்றமுடைய தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் 33 வயது நிரம்பிய தமது புதல்விக்கு பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றனர். தபால் மூலம் தொடர்பு கொள்ள விளம்பர இலக்கம் 6128, மே/பா ஈழநாதம் கிளிநொச்சி, தொலைபேசியில் தொடர்பு கொள்ள கா.பாஸ்கரன் T.P (077 6653323) (6128)

### தவறிவிட்டது

தியேட்டரடி சங்கானையைச் சேர்ந்த பரமசிவம் கமலா என்பவரது அடையாள அட்டை 635301490V 06.05.2005 அன்று கிளிநொச்சிக்கும், முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன். (தொ.பே.இல:- 077-6102527) (5924)

### தவறிவிட்டது

ஜேடி எட்வின் ராதா தேவி என்பவரது அடையாள அட்டையும், நிரந்தர பயண அட்டையும் புளியங்குளத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் இல:425 உதயநகர் மேற்கு கிளிநொச்சி எனும் முகவரியிலோ அல்லது வட பிராந்திய பாரவூர்திகள் சங்கம் திருத்தகப்பகுதி கிளிநொச்சி எனும் முகவரியிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றார். (6135)

### 2005-A/L

A/L பரீட்சைக்குரிய பொது அறிவு, பொது ஆங்கிலம், உயர் கல்விச் சேவை நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. வன்னியிலுள்ள சகல அறிவமுது புத்தக சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (6134)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு கடனுதவி

(அலுவலகசெய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு சுண்டிக்குளம் கல்லாறு கிராமத்தில் குடியமர்த்தப்பட்ட 52 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் தலா ஐம்பதாயிரம் ரூபாவீதம கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.



சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளாகி கல்லாறு கிராமத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் தொழில்துறையை மேம்படுத்தும் முகமாக தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினர் இக்கடனுதவியை வழங்கியுள்ளனர்.

நேற்று மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற இக்கடன் வழங்கும் நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொறுப்பாளர் மோகன் ஏற்றி வைத்தார்.


பயனாளிகளுக்கான கடன்களை கடற்புலிகளின் அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் பூரணி, கனடா தமிழர் பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சர்மிளா ஆகியோர் வழங்கினர். (ச,கு)

# பி.பி.ஸி உலக சேவை நடாத்திய ஊடகவியலாளர் பயிற்சி

(நமதுநிருபர்)

பி.பி.ஸி உலகசேவையினால் நடாத்தப்பட்ட அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் செய்தி ஆசிரியர்கள் /பிரதி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஹபறணையில் நடைபெற்றது.

அச்சு ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்புகள் கடந்த இரண்டாம் திகதி முதல் ஆறாம் திகதி வரையும், இலத்திரனியல் ஊடகங்க



ளுக்கான பயிற்சி வகுப்புகள் ஒன்பதாம் திகதி முதல் பதின் மூன்றாம் திகதி வரையும் நடைபெற்றன.

ஹபறணை விடுதியில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்புகளுக்கு பயிற்றுவிப்பாளராக பி.பி.ஸி உலக சேவையைச் சேர்ந்த ஹியூ பேர்ளின் பங்குபற்றினார். பி.பி.ஸி ஊடகவியல் பயிற்சித்திட்ட இணைப்பாளர் ஜெரோம் செனநாயக்கா இப்பயிற்சி வகுப்புகள் குறித்து அறிமுகம் செய்தார். மொழிபெயர்ப்பாளர்களாக திருமதி. லீலா, பராக்கிரம ஆகியோர் கடமையாற்றினர்.

முதல் ஐந்து தினங்கள் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளில் நமது ஈழநாடு, தினக்குரல், ஈழநாதம், நவமணி, லக்பிம,சண்டேரைம்ஸ், டெயிலிநியூஸ், ஜலண்ட், லங்காதீப,தினமின ஆகிய பத்திரிகைகளின் செய்தி ஆசிரியர்/பிரதி ஆசிரியர்கள் பத்துப் பேரும் அடுத்த ஐந்து தினங்கள் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளில் அரச மற்றும் தனியார் வானொலிகள், தொலைக்காட்சிகளைச் சேர்ந்த பத்துப் பேரும் கலந்து கொண்டனர்.

மேலும் பி.பி.ஸி யின் கல்வித்திட்டத்திற்கான தெற்காசியாவுக்கான இயக்குநர் சாம்மில்லர், பி.பி.ஸி சிங்கள சேவையைச் சேர்ந்த பிரியத் லியனகே, பிளிக்ற் (FLICT) செயற்றிட்ட அலுவலர் சுலோச்சனா பீரிஸ் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

# சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதல் மட்டக்களப்பு பா. உறுப்பினர்கள் வாக்கு மூலம்

(மட்டக்களப்பு)

அண்மையில் சந்திவெளியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட பொதுமக்கள் மீதான தாக்குதல் மற்றும் படுகொலை தொடர்பான சுயாதீன விசாரணை யொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுயாதீன விசாரணைக் குழுவின் தலைவராக கபில ஜய சேகர எனும் பொலிஸ் அத்தி யட்சகர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதிப் பொலிஸ்மா அதிபர் பந்துல பாலசூரியவின் நெறிப் படுத்தலின் கீழ் இவ் விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விசாரணையில் மட்டு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்த மூர்த்தி, பா.அரியநேத்திரன், த.கனகசபை, செல்வி.தங்கேஸ்வரி ஆகியோர் வாக்கு மூலத்தினைப் பெறுவதற்காக அழைக்கப்பட்டிருந்தனர். இவ்விசாரணை நேற்றுமுன்தினம் மாலை நான்கு மணியளவில் மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட போது முதலில் பாராளுமன்ற உறுப்பினரான த.கனகசபையின் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விசாரணை சுமார் மூன்று மணித்தியாலயம் இடம்பெற்றுள்ள அதேவேளை ஏனையோரின் வாக்கு மூலம் பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திவெளியில் இடம்பெற்ற தாக்குதலுக்கு நியாயமான, நீதியான ஒரு விசாரணை நடாத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர்கள் சனாதிபதி, படைத்துறை அமைச்சு, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியோருக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து விசாரணை நடாத்தப்படுகிறது என்று கூறப்படுகிறது

### சத்திர சிகிச்சைகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பொன்னம்பலம் மருத்துவமனையில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவிருந்த கண் சத்திர சிகிச்சையானது அதேதினம் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவ மனையில் நடைபெறவுள்ளது. ஆகவே, இத்திகதியில் கடந்த மாதம் சத்திர சிகிச்சை செய்யப்பட்டவர்களும், மேலும் அன்று சத்திர சிகிச்சை செய்வதற்காக கடிதம் கொடுத்தவர்களும் அன்று பி.ப. 2.00 மணிக்கு புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனைக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (கு)

* * *

(யாழ்ப்பாணம்)

அண்ணப்பிளவு, உதட்டுப் பிளவு, போன்ற குறைப்பாட்டு நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கான விசேட சத்திர சிகிச்சை எதிர்வரும் 21,22 ஆம் திகதிகளில் யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம் பெறவுள்ளன. (33)

# க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கு துரித மீட்டல் செயலமர்வு

(கிளிநொச்சி)

இவ்வாண்டு க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல், இண்ணந்த கணிதம் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான துரித மீட்டல் செயலமர்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளதென தமிழீழ கல்விக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் நலன் கருதி கொழும்பிலிருந்து வருகை தரும் வள ஆளணியினர் இச் செயலமர்வை நடத்தவுள்ளனர்.

நாளை முதல் வரும் 20ஆம் திகதி வரை இச்செயலமர்வு இடம்பெறும்.

நாளையும், நாளை மறுதினமும் இரசாயனவியல் ரி.தில்லைநாதன், ப. இராஜதேவா, 18ஆம் திகதி இணைந்த கணிதம் எஸ்.பிறேம்நாத், ஏ.குணசிங்கம், உயிரியல் வி.குகாதரன், ஆர். ஈஸ்வரதாசன், 19, 20ஆம் திகதிகளில் பௌதீகவியல் எஸ். கணேசன், எஸ்.பி. குணசீலன் ஆகியோர் செயலமர்வுகளை நடத்தவுள்ளனர்.

நாளைய தினம் காலை 10.00 மணிக்கு செயலமர்வு ஆரம்பமாகும். ஏனைய தினங்களில் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இச்செயலமர்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பள்ளிச் சீருடையில் வருகை தரவேண்டும். தொலைவிலிருந்து வரும் மாணவர்களுக்கு தங்கிமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

இதற்கான சகல ஏற்பாடுகளை கல்வி மேம்பாட்டுப் பேரவையினரும், மாணவர் அமைப்பினரும் மேற்கொண்டுள்ளனர்.

# பாலம் புனரமைப்பால் உள்வீதியினூடாக போக்குவரத்து

வடகிழக்கு பாலங்கள் புனரமைப்பு பணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி நாளை பரந்தன் முல்லை வீதியில் ஐந்தாவது கிலோ மீற்றரில் உள்ள முதலாவது பாலபுனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பால வேலைகள் பூர்த்தியாக இரு மாதகாலங்கள் செல்லும். இக்காலப்பகுதியில் பொது மக்களின் பாவனைக்கு இப்பாலத்திற்கு அருகாமையிலுள்ள முரசுமோட்டை கிராம உள்வீதியினூடாக போக்குவரத்துக்கான மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் மேம்பாட்டு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உளவியல், சமூகவியல், குற்றவியல் குற்றங்கள், நியாயங்கள் தொடர்பான பாடங்களில் சிறப்புப்பட்டம் பெற்றோர் அல்லது சமூகவியல் பாடம் உள்ளடலங்கலாக பொதுப்பட்டம் ஒன்றினைப் பெற்றிருப்போராகவும் 18 தொடக்கம் 45 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருப்போர் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் ஆணையாளர், சிறுவர் நன்நடத்தைச் சேவைகள் திணைக்களம், 150 ஏ.எல்.எச்.பி கட்டடம், நாவலர் வீதி, நுகேகொட எனும்முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ஈராக்கில் ராணுவ ரோந்து அணி மீது தாக்குதல்;
# ஆத்திரமடைந்த ராணுவம் மக்கள் மீது தாக்குதல்



பாக்தாத்துக்கு 185 கிலோமீற்றர் தொலைவில் தீவிரவாதிகளினதும், அமெரிக்கப் படைகளினதும் மோதலின் போது சேதமடைந்த வீட்டுத் தொகுதியைப் பார்வையிடும் ஈராக்கியர் ஒருவர்.

(பாக்தாத்)

**ஈராக்கில் நேற்று இடம் பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் அமெரிக்கத் துருப்பினர் கொல்லப்பட்ட அதேவேளை அமெரிக்கத் துருப்பினர் எட்டு ஈராக்கியர்களை சுட்டுக் கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இச்சம்பவமானது பாக்தாத்தில் இருந்து 185 கிலோ மீற்றர் வடக்கேயுள்ள பெல்ஜிய இராணுவ நிலைக்கருகில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் போது அமெரிக்கப் படையின் எத்தனைபேர் கொல்லப்பட்டனர் என்பது தெரியவரவில்லை.

2003ஆம் ஆண்டு முதல் ஈராக்கில் அமெரிக்க துருப்பினர் நிலை கொண்டது முதல் நேற்று முன்தினம் வரை 1238 அமெரிக்க இராணுவம் உயிரிழந்திருப்பதாக பென்டகன் அறிக்கை தெரிவிக்கின்றது.

இதேவேளை பாக்தாத்தின் வடக்கேயுள்ள மொசூலில் அமெரிக்கத் துருப்பினர் தங்களது நிலைகள் மீது தாக்கமுயன்ற மூன்று பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.





உஸ்பெகிஸ்தானில் நேற்று முன்தினம் சிறையுடைப்புக்கு முன்னதாக சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டம் நடத்தியதால் ஏற்பட்ட வன்முறையால் அண்டிஜன் நகரில் கார் ஒன்று எரிந்த நிலையில் கிடப்பதையும், இராணுவத்தினர் நிலையெடுத்து உசார் நிலையில் இருப்பதையும், படங்களில் காணலாம்.

# தீவிரவாதிகள் அதிரடி நடவடிக்கை
# உஸ்பெகிஸ்தானில் ஆயிரம் கைதிகள் மீட்பு

உஸ்பெகிஸ்தானில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சிறைச்சாலை ஒன்றை உடைத்து ஆயிரம் கைதிகளை மீட்டதுடன் பத்துப் பொலிசாரையும் பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றுள்ளனர்.

ரஷ்யாவில் இருந்து பிரிந்த நாடுகளில் ஒன்று உஸ்பெகிஸ்தான். இங்குள்ள தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடி வருகிறார்கள். அவர்களில் ஆயிரம் பேர் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதில்அண்டிஜான் நகரிலுள்ள சிறைச்சாலையில் தீவிரவாதிகள் பெருமளவில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்இவர்களை மீப்பதற்காக நூறுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள், 15 கார்களில் சென்று திடீர்த் தாக்குதல் நடத்தி மேற்படி ஆயிரம் கைதிகளைம் மீட்டுள்ளனர்.

இதனிடையே தீவிரவாதிகள், அரசுக்கட்டடம் ஒன்றைக் கைப் பற்றி, அதில் தங்கள் தலைமையகத்தை அமைத்தனர். இதனையடுத்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். ரஷ்ய அதிபர் புட்டின் மத்தியஸ்தம் செய்து வைக்க வேண்டுமென்று தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

# 8 பெண்களை கொன்றவருக்கு
# விச ஊசிபோட்டு மரணதண்டனை

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கனெக்டிகட் சிறையில் எட்டுப் பெண்களைக் கொன்ற கொலைகாரர் ஒருவருக்கு விச ஊசி போட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பு கடைசியாக அளிக்கப்பட்ட உணவில், மிக்ஸ்ட் வெஜிடபிள் பிரட், பழம், பழரசம் ஆகியவை வழங்கப்பட்டது. மைக்கேல் ராஸ்க்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதும், இதற்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கனெக்டிகட்லுள்ள நியூ இங்கிலாந்து மாநிலத்தில் 45 ஆண்டுகளுக்குப் பின் இப்போது தான் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

## ஜாக்சன் வக்கீலுக்கு நீதிபதி எச்சரிக்கை

பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சனின் முன்னாள் வக்கீல் மார்க் கொராகோஸ் நீதிமன்றில் ஆஜராகாவிட்டால் அவரை சிறையில் தள்ளி விடுவேன் என்று நீதிபதி எச்சரித்துள்ளார்.

வக்கீல் கொராகோஸ் சார்பில் ஷெப்பர்ட் கோப் ஆஜராகியிருந்தார் கொராகோஸ் வேறு வழக்குக்காக வேறு நீதிமன்றில் ஆஜரானதால் வரமுடியவில்லை என்று கூறினார். இதைக் கேட்டு நீதிபதி ரோட்னிமெல்லே கோபமடைந்தார்.

இன்று காலை 8.30 மணிக்கு வக்கீல் கொராகோஸ் ஆஜராக வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.சிறுவனிடம் முறைகேடாக நடந்ததாக ஜாக்சன் மீது நீதிமன்றில் வழக்குத் தொரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதின
# வியட்னாம் கப்பல் மூழ்கியது

வியட்னாமில் தெற்கு கடலோரப் பகுதியில் பெட்ரோல் ஏற்றிய இரண்டு கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் ஒரு கப்பல் நீரில் மூழ்கியுள்ளது. மூழ்கியதில் வியட்னாம் கப்பலென்று தெரிவிக்கப்படுகிறது.

மூழ்கிய கப்பலில் இருந்து பெட்ரோல் கசிந்து கடலில் கலந்ததாகவும் அதிலிருந்து 16 ஊழியர்களும் காப்பற்றப்பட்டுதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகளில் அரசு தலையிடுவதை நிறுத்த வேண்டும்

## சீனப் பிரதமர் வென்ஜியாபோ



(பீஜிங்)

"தனியார் நிறுவனங்களின் செயற்பாட்டில் தலையிடுவதை அரசும், அதிகாரிகளும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சீனப் பிரதமர் வென்ஜியாபோ கூறியுள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில் உள்ள நாடு சீனா ஆகும். கம்யூனிச அரசாங்கம் முதலாகத் தொடங்கிய ரஷ்யாவில் கூட கம்யூனிசம் வீழ்ச்சி அடைந்து விட்டது. ஆனால் சீனாவில் தொடர்ந்து கம்யூனிச ஆட்சி நடந்துவருகிறது. இருந்த போதிலும் அங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு பொருளாதார சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அன்னிய நாட்டு முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் சீனா வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது.

இந்த நிலையில் மந்திரிசபைக் கூட்டத்தில் பிரதமர் வென் ஜியாபோ கூறியதாவது; "வேகமான பொருளாதார சமூக வளர்ச்சிக்கு வேகமான நிர்வாக சீர்திருத்தம் மிக முக்கியமானதாகும்.

தனியார் தொழில் நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் எல்லா மட்டங்களிலும் அரசும், அதிகாரிகளும் தலையிடுகிறார்கள் இது தவறு. இதைக்கைவிட வேண்டும். நிறுவனங்கள் முதலீடு சம்பந்தமான முடிவுகளிலும் அரசு தலையிடக்கூடாது.

அரசாங்கம் செயற்படும் விதம் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது. நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதிலுள்ள சிவப்பு நாடா முறையை ஒழிக்க வேண்டும்.

இவ்வாறு பிரதமர் வென் ஜியாபோ கூறினார்.

# வெளிநாட்டவர்கள் அனைவரினதும் கைரேகைகளைப் பதிய சவுதி நடவடிக்கை

(டுபாய்)

சவுதி அரேபியாவுக்குள் நுழையும் வெளி நாட்டினர் அனைவரின் விரல் ரேகைகளையும் பதிவு செய்யப் போவதாக சவுதி அறிவித்துள்ளது.

சவுதிக்குள் நுழையும் வெளிநாட்டினரின் முழு விபரங்களையும் பதிவு செய்ய அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. குறிப்பாக விமானங்களில் வரும் வெளி நாட்டினரைக் கண்காணிக்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் கூறியதாவது;

சவுதிக்கு வரும் வெளி நாட்டினரின் விரல் ரேகைகள் இனிமேல் பதிவு செய்யப்படும் அதற்கான புதுச் சட்டம் நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. விமான நிலையம் வந்தடைந்தவுடன் வெளி நாட்டினரின் விரல் ரேகைகள் பதிவு செய்யப்படும். கிரிமினல்களின் விபரங்களை தெரிந்து கொண்டு குற்றங்களைத் தடுக்க இந் நடவடிக்கை உதவும்.

போலிக் கடவுச் சீட்டுக்கள் மூலமும் வேறு பெயர்களில் மோசடி செய்தும் பலர் சவுதிக்குள் நுழைவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பல்வேறு உருவங்களில் பல கடவுச் சீட்டுக்கள் மூலம் கிரிமினல்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க சவுதி அரசு இந்தப் புதுச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

எனினும் ஏற்கனவே சவுதிக்குள் நுழைந்து சட்ட விரோதமாகத் தங்கியுள்ளவர்களின் முழு விபரங்கள் கிடைக்கவில்லை. அந்தச் சிக்கலைத் தீர்க்கவும், அதிகாரிகள் தீவிர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாக. விமான நிலைய அதிகாரிகள் கூறினர்.

# தமிழீழ மாணவர் எழுச்சி நாளை

# சிறப்புற அனுஷ்டிக்க முன்னேற்பாடு

(திருமலை)

**தமிழீழ மாணவர் எழுச்சி நாளை எழுச்சியுடன் கடைப்பிடிக்க திருமலையில் தமிழீழ மாணவர் அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தமிழீழமாணவர் எழுச்சி தினத்தையொட்டிய போட்டிகள் தொடர்பான விபரங்களை தமிழீழ மாணவர் அமைப்பின் திருகோணமலைப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் யோ.புரட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மாணவர் எழுச்சி தினத்தை பேரெழுச்சியாக நினைவு கூருவதற்கான ஏற்பாடுகளை மாணவர் அமைப்பின் திருகோணமலைப் பிரிவு விரிவாகச் செய்து வருகிறது. மாணவராக இருந்து பல போராட்டங்களை முன்னெடுத்து நஞ்சருந்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பொன் சிவகுமாரன் நினைவாக ஜூன் ஆறாம் திகதியை ஆண்டுதோறும் தமிழீழ விடுதலைப்புலிகள் தேசிய நிகழ்வாகக் கடைபிடித்து வருகின்றனர். திருகோணமலை மாவட்டத்தில் இதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் கைவினைப் பொருளாக்கப் போட்டி, ஓவியப் போட்டி, விஞ்ஞானப் பொருளாக்கப் போட்டி ஆகியவை நடத்தப்படவுள்ளது. இம்மாதம் 31 ஆம் திகதியும், ஜூன் மாதம் முதலாம் திகதியும் புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை இந்து கலாச்சார மண்டபம், விபுலாநந்தாக் கல்லூரி ஆகியவற்றில் இப்போட்டிகள் நடைபெறும். இப்போட்டிக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக பின்வரும் இடங்களில் சமர்ப்பிக்க வேண்டும் எனப் பாடசாலை அதிபர்கள் கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஈச்சிலம்பற்று கல்விக் கோட்ட பாடசாலைகள் ஈச்சிலம் பற்று கணனி நிலையத்திலும், மூதூர் கல்விக் கோட்ட பாடசாலைகள் மூதூர் வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பணிப்பாளரிடமும், கிண்ணியா கல்விக் கோட்ட பாடசாலைகள் கிண்ணியா கோட்டக் கல்வி அதிகாரியிடமும், திருகோணமலை வலய பாடசாலைகள் வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பணிப்பாளரிடமும், கந்தளாய் கல்விக் கோட்ட பாடசாலைகள் க.லோகநாதன் வலயக் கல்வி அலுவலகம் கந்தளாயிலும், வாகரைக் கோட்ட பாடசாலைகள் ஊரியன்கட்டு அ.த.க.பாடசாலையிலும் சமர்ப்பிக்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் நடத்தப்படவிருந்த அணிநடைப் போட்டி சில காரணங்களுக்காக ரத்துச் செய்யப்பட்டு கரும்புலிகள் தினத்தில் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருவித வைரஸ் காய்ச்சலால் வன்னியில் பலர் பாதிப்பு

(நமது நிருபர்)

வன்னிப் பகுதியில் அண்மைக்காலமாக ஒருவித 'வைரஸ்' காய்ச்சல் பரவிவருகிறது. வயது, பால் வேறுபாடின்றி அனைவரையும் தாக்கிவரும் இவ்வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டோர்களால் வன்னிப் பகுதி மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவு நிரம்பி வழிகின்றது.

உடல் அசதி, வாய்கச்சல், சத்தி, பசியின்மை போன்ற அறிகுறிகளுடன் வரும் இக் காய்ச்சல் பல நாட்கள் நீடித்து செல்கிறது. அண்மைய நாட்களில் காணப்பட்டுவரும் மாறுபட்ட காலநிலை இந்நோய் பரவக் காரணமாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.(து)

## இரு உந்துருளிகள் மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்!

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் தேறாங்கண்டல் பகுதியில் வீதி விபத்தின்போது இரண்டு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர் பலத்த காயங்களுடன் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் உடன் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட சம்பவம் கடந்த வியாழன் நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

தேறாங்கண்டல் பகுதியிலிருந்து மல்லாவி நகருக்கு வந்து கொண்டிருந்த உந்துருளியும், மல்லாவி நகர்ப் பகுதியிலிருந்து தேறாங்கண்டல் பகுதியை நோக்கி பயணத்தை மேற்கொண்ட உந்துருளியும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் அவற்றில் பயணித்த தேறாங்கண்டலைச் சேர்ந்த முருகேசு பாலசுப் பிரமணியம் (வயது-25), மல்லாவியைசேர்ந்த செ.புனிதன் (வயது -35) என்பவர்கள் படுகாயமடைந்தனர். செ.புனிதன் என்பவர் கண்ணில் காயங்கள் ஏற்பட்டு உடன் வைத்தியசாலைக் காவு வண்டிமூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.(24)

## அழகியல் கலாமன்றக் கிளை பளையில் திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்றத்தின் கிளை கடந்த வியாழக்கிழமை பளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



மேற்படி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினையும், தேசியக் கொடியினையும் பளை அரசியல் துறைப்பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றி வைத்தார். கலாமன்றக் கொடியை கிளி.மாவட்ட அழகியல் கலாமன்ற அதிபர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பெயர் பலகையினை கிளி.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ் திரைநீக்கம் செய்துவைத்தார். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை கிளி.மாவட்ட அரச அதிபர் நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார். தொடர்ந்து சிறப் புரைகள், ஆசியுரைகள், நன்றியுரைகள் என்பன இடம் பெற்றன. (தீ)

## அலங்கார உற்சவம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமானது.

தொடர்ந்து பத்தாம் நாள் தீர்த்த உற்சவம் நடைபெறுமென ஆலய பரிபாலனசபையினர் தெரிவிக்கின்றனர். (19)

## திருமலையில் கடற்கோளினால் அழிக்கப்பட்ட 6615 வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை

### –32 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உதவ விருப்பம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கரையிலிருந்து 200 மீற்றர் பிரதேசத்தினுள் 6615 வீடுகள் கடற்கோளினால் அழிந்தும் சேதமடைந்து போயிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வீடுகளின் உரிமையாளர்களுக்கு 200 மீற்றருக்கு வெளியே காணிகளை அடையாளங் கண்டு அளந்து, எல்லையிட்டு அவற்றில் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு 32 தன்னார்வ நிறு:வனங்கள் திருகோணமலை மாவட்ட அரச அதிபருடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

இத்தகவலை கடற்கோள் வீடமைப்பு மீள்குடியமர்த்தல் பிரிவின் திருகோணமலை மாவட்ட முகாமையாளர் இஷான் விஜேதிலக தெரிவித்தார்.

குச்சவெளிப் பிரதேச செயலர் பிரிவில் காசிம் நகரில் லயன்ஸ் கழகம் 100 வீடுகளை நிர்மாணிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது. ஏனைய இடங்களில் புதிதாக வீடுகளை நிர்மாணிக்கும் பணி கொழும்பிலிருந்து நகர நிர்மாண அதிகாரசபையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் அதற்கான பொறுப்பை ஏற்றுள்ள தன்னார்வ அமைப்புக்கள் ஆரம்பிக்கும் என்றும் அவர் கூறினார்.

கடலிலிருந்து 200 மீற்றர் எல்லைக்குள் கடற்கோளில் அழிந்துபோன வீடுகளின் எண்ணிக்கை பிரதேச செயலர் பிரிவுவாரியாக வருமாறு; திருகோணமலை பட்டினமும் சூழலும்-1293, கிண்ணியா-2076, குச்சவெளி-1287, மூதூர்-1249, ஈச்சிலம்பற்று-609, சேருவில-101, கடலிலிருந்து 200 மீற்றர் எல்லைக்கு வெளியே பூரணமாகச் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 673 ஆகும். பிரதேச செயலர் பிரிவுவாரியாக விபரம் வருமாறு; திருமலைப்பட்டினமும் சூழலும்-31, கிண்ணியா-78, குச்சவெளி, 312, மூதூர்-81, ஈச்சிலம்பற்று-171, கடலிலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் பகுதியாக சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 1731ஆகும். பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விபரம் வருமாறு; திருமலைப்பட்டினமும் சூழலும்-313, கிண்ணியா-555, குச்சவெளி, 356, மூதூர்-24, ஈச்சிலம்பற்று-483 கடலிலிருந்து 200 மீற்றருக் குள்ளேயும், வெள்ளியேயுமாக கடற்கோளினால் 9019 வீடுகள் அழிந்தும், சேத மடைந்தும் உள்ளமை குறிப்பிடத் தக்கது. (25)

## இன்று மிருதங்கஅரங்கேற்றம்

(அலுவலக செய்தியாளர்)

லெப் கேணல் நவம் அவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவு நாளும் போராளிக் கலைஞன் இ. இதயராஜின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு இன்று மாலை நான்கு மணிக்கு லெப். கேணல் நவம் அறிவுக்கூட கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. அணிசெய் கலைஞர்களின் இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் இசை ரசிகர்களுக்கான வாகனஒழுங்குகள் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் பிற்பகல்மூன்று மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (தீ)

## -வட-கிழக்கு மாகாண- அரச,திணைக்கள ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவுகள் குறைப்பு!

(திருமலை)

வடக்கு கிழக்கு அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அனைத்துத் தர ஊழியர்களினதும் மேலதிக கொடுப்பனவுகள்யாவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு சனவரி முதல் ஊழியர்களது மாதாந்தச் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் அவர்களது மேலதிகநேரக் கொடுப்பனவு வீதமும் அதிகரித்துள்ளது. எனினும் சம்பளக் கொடுப்பனவுக்கு மட்டுமே திறைசேரி நிதியொதுக்கியிருப்பதால் ஏனைய கொடுப்பனவுகளை வழங்க நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படவில்லை. ஆகவே மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை நாள வேலைக் கொடுப்பனவு ஆகியவற்றை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ள சி.ரங்கராஜா வாரம் ஒன்றுக்கான மேலதிக நேரம் 10 மணித்தியாலங்களுக்கு குறைக்கப்பட்டுள்ளதாகவும் அது மாதாந்தம் 60 மணித்தியாலமாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

சிற்றூழியர்களினதும், சாரதிகளினதும் மேலதிக நேரம் மாதம் ஒன்றுக்கு 60 மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை ஊழியர்களுக்கு மேற்படி கட்டுப்பாடு பொருத்தமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மன்னார் ஆண்டாங்குளம் பாடசாலையில் கல்வி வள நிலையம் திறந்து வைப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் (REERDO) நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஒப்பிரேசன் டெய்ஸ்வேக் என்னும் செயற்றிட்டத்தின் கீழ் நோர்வே அபிவிருத்தி நிதியத்திலிருந்து கல்வி வளநிலையம் ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் ஆண்டாங்குளம் பாடசாலையில் இக்கல்விவள நிலையத் திறப்புவிழா நிகழ்வானது கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனப் (REERDO) பணிப்பாளர் செ.செல்வராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை விடுதலைப்புலிகளின் தளபதிகளின் ஒருவரான பாஸ்கரன் ஏற்றிவைத்தார். கல்வி வளநிலையப் பெயர்ப்பலகையினை மடு வலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஜேசுதாசன் திறந்து வைத்ததுடன் கல்வி வளநிலையக் கட்டடத்தினை விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் ரஞ்சன் லாலா திறந்து வைத்தார். விஞ்ஞான ஆய்வுகூடத்தினை ஆட்காட்டிவெளி பங்குத்தந்தை சீமான் அடிகளார் திறந்து வைத்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புரைகளை பங்குத்தந்தை சீமான் பாடசாலை அதிபர் விஸ்வராஜா, பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜேசுதாசன், தமிழர் புனர்வாழ்வுக்கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் கேசவன் ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர். பிரதம உரையினை விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் வழங்கினார்.

இறுதியில் ரீடோ நிறுவனத்தின் வளநிலையக் கணித ஆசிரியரான நந்தினியின் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

## ஊடகவியலாளரை அச்சுறுத்தும் குழுவைக் கண்டறிய நடவடிக்கை

### –சிறிலங்காப் பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

(கொழும்பு)


ஊடகவியலாளர் சிவராம் படுகொலைக்குப் பொறுப்பேற்றும், பல்வேறு முக்கிய ஊடகவியலாளர்களுக்கு கொலை மிரட்டல் அனுப்பியும் உள்ள ஆயுதக் குழு தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் உள்ளிட்ட பல்வேறு ஊடகவியலாளர்களுக்கு அநாமதேய அமைப்பு ஒன்று கொலை மிரட்டல் கடிதம் அனுப்பி இருந்தது. இது தொடர்பாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபருக்கு புகார் அனுப்பியதைத் தொடர்ந்து அவர் இந்த உறுதியை அளித்துள்ளார். இருப்பினும் சிவராம் படுகொலை செய்யப்பட்டு இருவாரங்கள் கடந்த நிலையில பொலிஸ் விசாரணையில் முன்னேற்றம் எதுவும் இல்லாதது குறித்து மக்கள் விசனம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று குமுதினிப் படுகொலை நினைவு நாள்...






# குமுதினிப் படுகொலை- படையினரின் கொடூரமான மனித உரிமை மீறல்

## வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம்

(அலுவலக செய்தியாளர்)

**குமுதினிப்படகு படுகொலை காலத்தால் அழிக்கமுடியாத கொடூரமான மனித உரிமைமீறலாகுமென வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தெரிவித்துள்ளது. குமுதினிப்படுகொலையின் 20 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குமுதினிப்படகில் பயணித்தவர்களில் 30பேர் கொடூரமாகக் கொல்லப்பட்டும், 25பேருக்கு மேல் பயங்கரமாகக் காயப்படுத்தப்பட்டும், சிலர் அங்கங்களை இழந்தும், பரிதவித்தமை உலகத்தை உலுக்கிய ஓர் கொடிய செயலாகும்.

இக் கொடூரம் நிகழ்ந்து 20வருடங்களாகிவிட்டபோதிலும் தமிழ் மக்களுடைய துயரவாழ்க்கை தொடர்கதையாகவே உள்ளது. விசாரணையற்ற கைதுகள், காலவரையற்ற தடுப்புக்காவல்கள் ஒருபுறமும், கொல்லப்படுவோர், காணாமல் போவோரின் பட்டியல் இன்னொரு புறமாகவும் நீண்டுகொண்டே செல்கின்றது.

நியாயம் கேட்போர் பலவிதமான வடிவங்களில் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றார்கள். பத்திரிகை நிருபர்கள் கூடத் தயவுதாட்சணியமின்றிக் கொல்லப்படுகின்றார்கள்.

சனநாயக விதிகளுக்குஅமைவாகத்தம் உரிமையைத்தெரிவிக்கும் ஊர்வலங்கள் கூட துப்பாக்கிச் சூட்டுக்கும் குண்டர் தடியடிப்பிரயோகத்திற்கும் இலக்காகின்றன.

பாலியல் கொடுமைகளும் பாரபட்சங்களும் தொடருகின்றன. சுருக்கமாகக் கூறின் தமிழ்மக்கள் பயப்பீதியுடனும், மரணதண்டனை விதித்த குற்றவாளியின் மனநிலையுடனும் வாழ்வதையே காணமுடிகின்றது. பயங்கரவாதத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் என்று அரசால் கூறப்படும் பகுதிகளிலேயே இவைகள் நடைபெறுகின்றமை உலகறிந்த உண்மையாகும். இத்தகைய கொடுமைகள் நீங்கும் நாள் எப்போது என்பதையே தமிழ்மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர் என வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தெரிவித்துள்ளது. (தீ)

# குமுதினிப் படுகொலையின் 20 ஆம் ஆண்டு நினைவு இன்று

(நெடுந்தீவு)

குமுதினிப் படுகொலையின் 20 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டினை நெடுந்தீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் மேற்கொண்டுள்ளனர். நெடுந்தீவு கிழக்கில் நினைவுத் தூபி அமைந்துள்ள மாவிலித் துறையில் காலை 8.30 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெறும்

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி பயணிகளை ஏற்றி வந்த குமுதினிப்படகை நயினாதீவில் இருந்து வந்த சிறிலங்கா கடற்படையினர், வழிமறித்து சிறுவர் முதியோர், பெண்கள் என்ற வேறுபாடின்றி கத்திகளாலும், கோடாரிகளாலும் வெட்டிப் படுகொலை செய்தனர். (28)

## கலந்துரையாடல்

அனைத்து சமூக சேவை அலுவலர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். மாவட்டச்செயலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்கா அரசுக்கு வழங்கும் உதவிகளை சர்வதேச சமூகம் உடன் நிறுத்த வேண்டும்

## -யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூ.ச.சமாசம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசுக்கு வழங்கும் உதவிகளை உடன்நிறுத்தி தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் உடனடியாக பேச்சுக்களைத் தொடங்க அழுத்தம் கொடுக்க வேண்டும். என யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது. சிறிலங்காவுக்கான ஐரோப்பிய ஒன்றிய வதிவிடப் பிரதிநிதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக்கிழக்கு மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்தின் உதவியுடன் முன்னெடுத்துச் செல்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்மொழியப்பட்ட இடைக்கால நிர்வாகசபையை வழங்காமல் இலங்கை அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்து வருவது தாங்கள் அறிந்ததே. இதனால் சர்வதேச சமூகத்தினால் வழங்கப்படும் உதவிகள் கையாளப்படுவதில் வெளிப்படைத் தன்மை முழுமையாக இல்லை என்பதை மிக்க கவலையுடன் குறிப்பிட விரும்புகின்றோம்.

சர்வதேச சமூகத்தின் இடையறாத முயற்சியினால் கடந்த மூன்றாண்டு காலமாக நிலவிவரும் சமாதானச் சூழலைச் சீர்குலைக்க அரசாங்கம் முயன்று வருகிறது. இனவாத கட்சிகளுடனும்,தமிழர் தேசத் துரோகக் கும்பலையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளைச் சீண்டி போருக்கு வலிந்து இழுக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா அரசு மறைமுகமாக ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறான போக்குக்கு சர்வதேச சமூகம் இடம்கொடுக்காது சிறிலங்கா அரசு மீது பொருளாதார, இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்து அதைச் சமாதான முயற்சிகளின் பக்கம் திருப்பிவிட முயல்வது தங்களதும், சர்வதேச சமூகத்தினதும் தார்மீக கடமையாகும்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நாளையும் நாளைமறுதினமும் இலங்கையில் நடைபெறவுள்ளதாகநாம் அறிகின்றோம். இவ்வாறான உதவி வழங்கும் நடவடிக்கை சிறிலங்கா அரசின் இராணுவக் கொள்கைக்கு வலுவூட்டுவதுடன் ஈழத்தமிழர் உரிமைப்போரை நசுக்க முயல்வதாக அமையும்.

தற்போது நிகழ்கின்ற சமாதானத்துக்கான இந்த வாய்ப்பைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள சர்வதேச சமூகம் உதவ வேண்டும் அதற்காக சிறிலங்காஅரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.(சு)

## -ஆரையம்பதி அகதிமுகாமில்-

# பெண்ணுடன் பாலியல் சேட்டையில் ஈடுபட்ட பொலிஸ் ஆயுதத்தை இழந்தார்

ஆரையம்பதி அகதி முகாமில் பெண்ணொருவருடன் பாலியல் சேட்டையில் ஈடுபட்ட சிறிலங்கா பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கி இனந்தெரியாத நபர்களினால் கடந்த புதன் இரவு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தையடுத்து மோப்ப நாய்கள் சகிதம் பொலிசார் துப்பாக்கியைத்தேடியும் பயனளிக்கவில்லை. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:காவல் கடமை என்ற போர்வையில் அகதி முகாமில் நிறுத்தப்பட்டுள்ள பொலிசார் அங்குள்ள பெண்களை இம்சைப்படுத்த முனைவதாகப்புகார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் தமது துப்பாக்கியை வைத்து விட்டுப் பெண்ணொருவருடன் பாலியல் சேட்டையில் ஈடுபட முனைந்தபோது இதனை நன்கு அவதானித்திருந்தவர்கள் துப்பாக்கியை எடுத்துச் சென்றுள்ளனர். இதனை அடுத்து இவர் கடமைபுரியும் காத்தான்குடிப்பொலிஸார் மோப்பநாய்கள் சகிதம் அந்த அகதி முகாமில் துப்பாக்கியைத்தேடி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# ஊடகவியலாளர் நாஸர் சிகிச்சைபெற்றுத் திரும்பினார்

மட்டக்களப்பு சந்திவெளிச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஏறாவூர் செய்தியாளர் ஏ.ஜீ.எம். நாஸர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் வீடு திரும்பினார். செய்தியாளர் நாஸரின் தோள்ப்பட்டையில் முறிவு ஏற்பட்டதாலேயே இவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை, க.தங்கேஸ்வரி, எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

# த.பொ.மே.நிறுவன அனுசரணையில் கரடியனாறு விவசாயிகளுக்கு கடனுதவி


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் அனுசரணையுடன் கரடியனாறில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியினால் விவசாயிகளுக்கான கடன் திட்டமொன்று நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் பயனாளிகளுக்கு கடனடிப்படையில் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் தொழில் வாய்ப்புக்கான உந்துருளிக்கடன், விவசாயக்கடன் எனப் பலதரப்பட்ட கடன்உதவிகள் வழங்கப்பட்டன.

காலை பத்து மணியளவில் கிராமிய அபிவிருத்தி வங்கியில் ஆரம்பமான இந்தக் கடன் வழங்கும் வைபவத்தில் மட்டு. அம்பாறை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஈழமாறன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்வில் பயனாளிகள் வங்கியின் முகாமையாளர், பணியாளர்கள், பொதுமக்கள் அனைவரும் பங்குபற்றினர்.

விவசாயக் கடன் கையளிப்பு நிகழ்வில் முதலாவதாக விவசாய செய்கைக்கான தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை பயனாளி ஒருவருக்கு மட்டு. அம்பாறை பொருண்மிய பொறுப்பாளர் வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அடுத்து வியாபாரத் தொழிலைச் செய்வதற்காக உந்துருளிக்கடனுக்கான பணத்தினை பயனாளி ஒருவருக்கும் மட்டு. அம்பாறை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச்சேர்ந்த சங்கரி வழங்கினார். அதனைத்தொடர்ந்து விவசாய கடனுதவிக்கான பணத்தினை பயனாளி ஒருவருக்கு கிராமிய அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் மதி வழங்கினார். தொடர்ந்து கடனுதவி கோரிய அனைத்துப் பயனாளிகளுக்கும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப கடன் வழங்கப்பட்டது.

கடந்த சில மாதமாக கிராமிய அபிவிருத்தி வங்கி குறைந்த மீளளிப்பு வட்டியுடன் கூடிய கடன்களை வழங்கி விவசாயக்கடன், வியாபாரக்கடன், வீட்டுக் கடன், ஊர்திக்கடன் எனப்பல கடன் திட்டங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



*. வட-கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக எத்தனை ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுகின்றது.?

காணப்படுகின்றது.

*. எத்தகைய பாடங்களுக்கு ஆசிரிய வெற்றிடம் அதிகம் உள்ளது?

ஆங்கிலம், மற்றும் முக்கிய தொழில்நுட்பப் பாடங்களுக்கு ஆசிரிய வெற்றிடம் காணப்படுகின்றது. வட-கிழக்கில் மட்டும் கிட்டதட்ட 1900 ஆங்கில ஆசிரியர்களுக்கு தற்போது வெற்றிடம் உள்ளது.

*. வட-கிழக்கில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக எத்தனை பேர் கடமையாற்றுகின்றனர்?

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக வடகிழக்கில் மொத்தமாக 850 இற்கும் மேற்பட்டோர் கடமையாற்றுகின்றனர். இவர்களிலும் நாங்கள் சுட்டிக்காட்டி வருகின்றோம்'

ஆங்கில பாடத்தில் 'சி' தரசித்தியடைந்தவர்களையும் உள்வாங்கி அவர்களுக்கு ஆசிரியப் பயிற்சியினை வழங்கி ஆங்கில ஆசிரியர்களாக உள்வாங்கப்படவேண்டும் என்ற கருத்து தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றது. கொழும்பில் நடைபெறும் கூட்டங்களிலும் இது குறித்து திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலத்தில் ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கான நல்ல பதில் விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

*. பட்டதாரி ஆசிரியர்களை உள்வாங்குவது தொடர்பாக என்ன நடவடிக்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு கவனம் செலுத்தலாம்.?

தொண்டராசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கலில் பாதிக்கப்படும்போது அவர்களது பிரச்சினைகள் தொடர்பாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று ஆரோக்கியமான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இவ்வாறு செய்யப்படின் தொண்டராசிரியர்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படும்.

*.பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் எவ்வாறான நடவடிக்கையை மேற் கொள்ளலாம்.?

தொண்டராசிரியர் நிரந்தர நியமன நேர்முகப் பரீட்சையின்போது பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமது முறைப்பாடுகளை வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக

# வட- கிழக்கில் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு 5777 ஆசிரியர்கள் தேவை

**வடக்குக் கிழக்கு கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆசிரிய நியமனக்கிளையின் உதவிக்கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஸ்ண குமார் அவர்களுடனான சந்திப்பு.**

வடக்கு கிழக்கு மாகாணத்தில்- தமிழ் மொழி மூலத்தில் மட்டும் 5777 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன.

ஆசிரிய சேவைக்கான பிரமாணக் குறிப்பின்படி ஆசிரிய சேவையில் உள்வாங்கப்படும் ஒருவர் கட்டாயம் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. இதற்கமையவே ஆசிரியர் களை உள்வாங்கவேண்டியுள்ளது.

*. தற்போது வழங்கப்பட்டுவரும் ஆசிரிய நியமனங்களின்போது இந்த வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படுமா?



பொதுவாக நூறு சதவீதமும் ஆசிரிய தேவையையும் பூர்த்தி செய்ததாக எந்தவொரு காலத்திலும் இல்லை. ஆசிரியர்களுக்கு தொடர்ந்து பற்றாக்குறையே களுக்கு நிரந்தர நியமனம் வழங்க பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த ஆசிரியர்களும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனப் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

*. பகுதிநேர ஆங்கில ஆசிரியர் களுக்கு நிரந்தர நியமனம் நிச்சயம் வழங் கப்படுமா?

இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற வேட்கை சகலரது மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. ஒருவருடம் அல்லது ஆறு மாத காலத்துக்குள் இவர்கள் நிரந்தரமாக்கப்படலாம்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரும் மத்திய அரசாங்கத்தின் வேண்டுதலுக்கு அமைய 01.10.2001 இல் 180 நாட்கள் சேவையை முடித்த 650 ஆசிரியர்களது பெயர் விபரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வடக்குக் கிழக்கில் உள்ள ஆங்கில ஆசிரியா வெற்றிடம் தொடர்பாக சகல கூட்டங் எடுக்கப் பட்டுள்ளது.?

இவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது 4500 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான பரீட்சை ஒன்று விரைவில் நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

*.தற்பேதைய தொண்டராசிரியர் நேர்முகத் தேர்வு தொடர்பாக நீங்கள் கூறும் கருத்து என்ன?

தற்போதைய தொண்டர் ஆசிரியர் நியமனத்தின்போது கஷ்டம், அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றியோருக்கே நிரந்தர நியமனம் வழங்குமாறு மத்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் ஏனைய பாடசாலைகளிலும் தொடர்ச்சியாக சேவை யாற்றிய தொண்டராசிரியர்கள் உள்ளனர். இந்த் நிலையில் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

*.தொண்டராசிரியர் நியமனத்தில் மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கலாம். அவர்களது பிரச்சினைகள் குறித்து முறைப்பாட்டுக்குழு ஆராய்ந்து தகுந்த தீர்மானங்களை எடுக்கும்.

*.மேன்முறையீடு செய்த தொண்டராசிரியர்களுக்கு நீங்கள் கூறும் பதில்?

தொண்டராசிரியர் தொடர்பாக மேன்முறையீடு செய்தவர்களது விண்ணப்பங்களை மாகாணக்கல்வி அமைச்சிலுள்ள ஐந்து பேர்



கொண்ட குழு ஒன்று ஆராய்வு செய்யும்.

இந்த ஆராய்வினை அடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு விமோசனம் கிடைக்கக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ★

தி.ஜெயக்குமார், க.தவரட்ணம்

# போக்குவரத்தில் நெருக்கடியைப் போக்க உரிய நடவடிக்கைக்கு மக்கள் வலியுறுத்து



படம்:- ரூபன்

வட்டக்கச்சி பொதுச்சந்தைக்கு அண்மையாக பாரியளவில் சேதமடைந்துள்ள நாவலடி நீரமேவிப்பாயும் பகுதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமை யால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்குத் தொடர்ச்சியாக உள்ளாகி வருகின்றனர். இதனை புனரமைப்புச்செய்ய இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

மிக மோசமாகச் சேதமடைந்துள்ள இந்தப் பகுதியில் கோஸ்வேயால் இரணைமடுக் குளத்திலிருந்து வட்டக்கச்சி பிரதேச வயல் நிலங்களுக்கு நீரைகொண்டு செல்லும் பிரதான வாய்க்காலில் பெரும பங்கு நீர் வீணாக வெளியேறிக் கொண்டுள்ளது. இதனால் போக்குவரத்துக்கும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுவருகின்றது.

இது குறித்துப் பல தடவைகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ள போதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரித்தான இப்பகுதி புனரமைப்பது குறித்து தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படாது இழுபறி நிலையிலிருந்து வருகின்றது. இதனால் பொதுமக்கள் நாளாந்தம் பெரும் பாதிப்பிற்கு முகம் கொடுத்து வருவதைக் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

குறிப்பாக மழை காலங்களில் இந்தப்பகுதி ஊடாக பெருமளவு நீர் வெளியேற்றப்படுவதால் போக்குவரத்து துண்டிக்கப்படுவதுடன், பெரும் சிரமங்களையும் வருடாந்தம் சந்தித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (12)

## இரத்ததானம்

(வவுனியா)

உலக செஞ்சிலுவைச்சங்க தினத்தையொட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் வவுனியா மாவட்டத் தொண்டர்கள் 40 பேர், வவுனியா பொதுவைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்துள்ளனர். (10)

## வீடு கையளிக்கும் நிகழ்வு

(மல்லாவி)

மாங்குளத்தில் துணுக்காய் வீதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட செல்வராணி குடியிருப்புத்திட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

## கண்டெடுப்பு

ஜே.மிஸ்டானியல் றொபின்சன் யாழ்ப்பாணம் (800245214ஏ) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கிளிநொச்சி திருநகர் வீதியில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## மூவருக்கு எதிராக சட்டநடவடிக்கை

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேச தென்னியங்குளம் பகுதியில் சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்திகளில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மூவரை துணுக்காய் காவல்துறை பணிமனையினர் கடந்த புதன்கிழமை கைதுசெய்தனர். கசிப்பு உற்பத்திப் பொருட்களுடன் சந்தேக நபர்களைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், அவர்களை மல்லாவி மாவட்ட நீதிமன்றில் உட்படுத்தினர். (24)

## தற்கொலை

(அலுவலகசெய்தியாளர்)

வேட்டைத்துப்பாக்கியினால் தன்னைத்தானே சுட்டு ஒருவர் தற்கொலை புரிந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூநகரி கிராஞ்சிப்பகுதியில் வசிக்கும இராசலிங்கம்-மகேஸ்வரன் (வயது-26) என்பவரே தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துள்ளார்.

வேட்டைத்துப்பாக்கியால் நெஞ்சிலே சுட்டுத் தற்கொலை புரிந்ததாக திடீர் மரண விசாரணை அதிகாரி குகதாசன் தெரிவித்துள்ளார். (கு)

# சந்திரிகாவை அச்சமடையச் செய்துள்ள ஜே.வி.பி யின் துரித வளர்ச்சி

பொதுவாக இலங்கை அரசியலில் குறிப்பாக சிறிலங்காவின் அரசியலில் இன்று குறிப்பிடத்தக்க தவிர்க்கமுடியாத தாக்கம் விளைவிக்கும் சக்தியாக ஜே.வி.பி அமைந்துள்ளது. அதாவது கடந்த மூன்றாண்டுகளில் சமாதான முயற்சிகளுக்கு பலத்த பின்னடைவை விளைவித்த சக்தியாக இது காணப்படுகிறது.

2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்ட வேளை துக்குப் பயந்தோ அல்லது இயல்பான ஏமாற்றும் குணத்தாலோ சமாதான முயற்சிகளைத் துரிதமாக முன்னெடுக்க ஐக்கிய தேசியட் கட்சி முன்வரவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தை அது சரிவரப் பயன்படுத்தவில்லை.

கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமாதானமுயற்சிகளைத் தீவிரமாகஅது முன்னெடுத்திருக்குமாயின் நிறைவேற்று அதிகாரத்தால் தூக்கி எறியப்பட்டிருக்க மாட்டாது. அதே வேளை ஜே.வி.பி. இவ்வளவு தூரம்



ஜே.வி.பி. மேதின ஊர்வலம்

மூலமோ அல்லது உதவி வழங்கும் நாடுகள் வழங்குவதாக அறிவித்த பெருமளவு நிதிமூலமே அசைக்க முடியாத இடத்தைப்பெற்று விடக்கூடும் என்ற அச்சம் காரணமாக ஜே.வி.பி யுடன் இணைய சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவெடுத்தது.

இதனை விட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு தனிப்பட்ட ரீதியில் அரசியல் வாழ்வில் நிலைத்து நிற்க அரசியல் அமைப்பு மாற்றம் தேவைப்பட்டது. எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி யுடன் ஒப்பந்தம் ஒன்றுக்கு முன் வந்தது.


இந்நிலையில் ஜே.வி.பி. மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி பெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தி தனது பலத்தை வெளிப்படுத்தியது. இந்த ஊர்வலம் மூலம் சுமார் ஒரு வருட காலத்துக்குள்ளேயே அதனால் மக்களை திரட்ட முடிந்தமையானது ஜே.வி.பி யைப் பொறுத்த வரை ஒரு பாரிய மாற்றமாகும் இந்த மாற்றமானதுசிறிலங்காசுதந்திரக் கட்சியையை திகைப்படையச் செய்தாலும் அதற்கு ஜே.வி.பி யுடன் இணை

முறைப்படுத்துவதற்கு ஜே.வி.பி முட்டுக்கட்டைபோடுவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்கும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பெருத்த இடைஞ்சலாக இருக்கின்றது.

பொதுவாக ஆளும் கட்சிகளில் உள்முரண்பாடுகள் இருப்பினும் ஆட்சிக்காலம் முடிவடையும் வரை அம்முரண்பாடுகள் வெளித்தெரிவதில்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பொறுத்தவரை அது ஆரம்பம் முதலே முரண்பாடுகளின் மொத்த வடிவமாக அமைந திருக்கின்றது. கூட்டமைப்பு என்ற ரீதியில் முரண்பாடுகள் சகஜம். எனினும் இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே முரண்பாடுகள் தீவிரமடைந்து சனாதிபதி சந்திரிகா கட்சியைக் காப்பாற்றுவதா.? ஆட்சியைக் காப்பாற்றுவதா? என்ற கேள்விக்குள்ளாகியிருக்கின்றார். அதேவேளை அவர் திட்டமிட்டவாறு அரசியலமைப்பு மாற்றமொன்றை ஏற்படுத்தும் நிலையில் அவர் உள்ளாரா? என்ற கேள்விக்கு அவருக்குச் சாதகமான

ஊர்வலங்கள் அவ்வாறே அமைகின்றபோது அது இப்போது வலிமை வாய்ந்த ஆளும் கட்சியாக இருப்பதால் மேலும் மெருகடைந்து காணப்பட்டது. ஜே.வி.பி யின் ஊர்வலத்துக்கு காலை ஆறு மணியில் இருந்தே சிவப்பு நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட அரச போருந்துகளில் அதன் தொண்டர்கள் கொழும்பு நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டனர். கொழும்புக்கு வெளியே சுமார் 50 கிலோ மீற்றர் தூரம் வரை பேருந்து தரிப்பு நிலையங்களில் சிவப்பு நிற உடைகள், தொப்பிகள், அணிந்த ஜே.வி.பி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் குழுமி நின்று இவ்வாறு சிவப்புநிறக் கெடிகளால் அலங்கரிக்கப்பட்ட பேருந்துகளில் ஏறிப் பயணித்துக் கொண்டிருந்தனர்.

முக்கிய இடங்கள்,சந்திகளில் சிவப்புநிறமே வியாபித்து இருந்தது. பச்சை,நீல நிறங்கள் மிகவும் அரிதாகவே தென்பட்டன. அதே வேளை சுனாமி புனரமைப்புத் தொடர்பான நடவடிக்கைகளில் ஜே.வி.பி யின் செயற்பாடானது நிச்ச


ஜே.வி.பி. மேதின ஊர்வலம்

ஜே.வி.பி பாராளுமன்ற ஆசனங்கள் பதினாறைக் கொண்டிருந்தபோதும் அதனால் சமாதானத்திற்கு எதிரான ஊர்வலத்தை, ஏன் சிறியஒரு ஆர்ப்பாட்டத்தைக் கூட ஒழுங்கு செய்ய முடியவில்லை. சமாதானத்துக்கு எதிரான அதன் ஆர்ப்பாட்டத்தில் நூறுக்கும் உள்ளிட்டோரே கலந்து கொண்டனர்.

போர் நிறுத்த ஒப்பந்தமும் சமாதான முயற்சிகளும் அன்று தென்பகுதி மக்களால் அவசியமென உணரப்பட்டு ஐக்கியதேசியக் கட்சி பதவியில் அமர்த்தப்பட்டது. இச் சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி யால் மட்டுமல்ல நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாலேயே எதுவும் செய்ய முடியாத நிலை இருந்தது.

வளர்ச்சியடைந்திருக்கவும் மாட்டாது.

சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட தேக்கநிலையானது தென்பகுதி மக்களிடையே அவநம்பிக்கை உருவாகக் காரணமாகியது. அதாவது யுத்தம் நிறுத்தப்படுமாயின் பொருளாதார நிலை பெரிதும் மேம்படுமென மக்கள் நம்பியிருந்தனர். ஆனால் பொருளாதார நிலை புத்துயிர் பெற்றது என்ற ரீதியில் சிறிதும் மேம்பாடு காணப்பட்டாலும் மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு விரைவான மாற்றம் ஏற்படாமை அவர்களுக்கு ஏமாற்றம் அளித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தை ஜே.வி.பி நன்றாகப் பயன்படுத்திக்கொண்டது. ஒருபுறம் தேசப்பற்றாளர் முன்னணி என்ற அமைப்பின் ஊடாக பிக்குகளையும், தீவிர இனவாதிகளையும்


ஜே.வி.பி. மேதின ஊர்வலம்

வடக்குக் கிழக்கு மக்களை விட தென்பகுதி மக்களே சமாதான சூழ்நிலையால் பெரும் நிம்மதியடைந்தனர். காவலரண்கள் அகற்றப்பட்டன. யுத்த சூழ்நிலையால் ஏற்பட்ட பதற்றம் தளர்ந்தது. பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. இன்றும் கூட முற்று முழுதாக இல்லாவிடினும் தென்பகுதியில் அந்நிலையே காணப்படுகிறது.

ஆனால் இந்நிலை மேலும் முன்னேற்றம் அடையாமல் போனமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்பேற்க வேண்டிய நிலையுள்ளது. அதாவது நிறைவேற்று அதிகாரத்

திரட்டிய அது செயலற்றுப் போயிருந்த சிறிலங்காசுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களை (குறிப்பாக மங்களசமர வீர ,அநுராபண்டார நாயக்க, அருச்சுணரணதுங்க) இதில் இணைத்துக் கொண்டது. மறுபுறம் ஜே.வி.பி யுடன் இணையாது சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிபீடம் ஏறமுடியாது என்ற தோற்றப்பாட்டை சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள சிலர் ஏற்படுத்தினர். இதிலே அநுராபண்டார நாயக்க முன்னணியில் இருந்தார்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சமாதான முயற்சிகள்

வதைத் தவிர ஐ.தே.கட்சியை வீழ்த்த வேறு வழி தெரிந்திருக்கவில்லை.

இந்தப் பலவீனத்தைப் புரிந்து கொண்ட ஜே.வி.பி தனக்குப்பெரிதும் சார்பான வகையில் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது.

இதேவேளை ஜே.வி.பி யுடன் இணைந்து ஆட்சியை கைப்பற்றிய பின் ஜே.வி.பியை வெளியேற்றிவிடும் அல்லது விழுங்கிவிடும் திட்டத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 39 ஆசனங்களுடன் ஜே.வி.பி வெற்றிபெற்றமையானது பெரும் இக்கட்டான நிலையைச் தோற்றுவித்துள்ளது.

2002 ஆம்ஆண்டில் ஐ.தே.க அமைச்சரவையில் ஒரு கைதிபோல இருந்த தாகக்கூறப்படும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று அதனைவிட மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

இன்று பொதுக்கட்டமைப்பு, இடைக்கால நிர்வாகம், சமாதான முயற்சிகள் இவை எதிலுமே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செயலற்ற ஒருவராகிவிட்டார். இவற்றை விட்டாலும் அமைச்சரவையில் ஒரு சிறிய தீர்மானம் மேற்கொள்வது என்றால் கூட ஜே.வி.பி யின் தயவு அவருக்குத் தேவைப்படுகிறது.

பிரேரணைகளில் இருக்கின்ற சொற்களைக்கூட அப்படி அமையக் கூடாது இப்படித்தான் அமைய வேண்டுமென ஜே.வி.பி முரண்டு பிடிப்பதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசனம் தெரிவித் திருந்தார். அத்துடன் ஒத்துழைக்க விரும்பாவிட்டால் கட்சியை விட்டு வெளியேறலாம் எனவும் எச்சரித்துப் பார்த்தார்.

ஆனால் ஜே.வி.பியோ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறிவித்த கொள்கைத்திட்டத்திற்கு இணங்க செயற்படாதவர்களே கட்சியை விட்டு வெளியேற வேண்டுமென வலியுறுத்துகின்றது.

இப்பொழுது பொருளாதார ரீதியான திட்டங்களைக்கூட நடை

பதில் இல்லை.

சுருக்கமாகக் கூறின் சனாதிபதி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரம் எவ்வாறு ஐ.தே.முன்னணி ஆட்சியை செயற் திறன் அற்றதாக ஆக்கியதோ, அவ்வாறே ஜே.வி.பி யின் நடவடிக்கைகள் தற்போதைய ஆட்சியை மாற்றியுள்ளது.

ஆனால் ஜே.வி.பி யைப் பொறுத்தவரை அதன் வளர்ச்சி தீவிரமானதாக இருக்கின்றது. ஆட்சியாளரே தாங்கள்தான் என்பது போன்றதான தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதில் ஜே.வி.பி பொரும்பாலும் வெற்றி கண்டுள்ளது.இதனை மாற்றியமைப்பதானால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஆட்சியைக் கலைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதே பெரும்பாலும் நிலையாக இருக்கின்றது. ஆனால் ஆட்சிக் கலைப்பு ஐ.தே.க.வுக்கு சாதகமானதாக அமையலாம்.

அதேவேளை ஜே.வி.பி முன்னரைவிட அதாவது முன்னர் தனித்துப் போட்டியிட்டுப் பெற்றதைவிடக் கூடுதலான பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெறும் வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது.

கடந்த மே தினத்தை பொதுக் கட்டமைப்பு, இடைக்கால நிர்வாகம் சமாதான முயற்சிகளுக்கு எதிரான அறைகூவலாக ஜே.வி.பி நடத்தியது. ஏனைய விடயங்களும் அதில் பிரஸ்தாபிக்கப்பட்டபோது முதன்மை விடயங்களாக அவையே இடம் பெற்றிருந்தன. இதற்கென நடத்தப்பட்ட மேதினப் பேரணி ஜே.வி.பி ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கட்சி என்பதைப் பறைசாற்றுவதாக இருந்தது.

வழமையாகவே ஜே.வி.பி யின்

யமாகப் பல தரப்புகளுக்கு வயிற்றில் புளி கரைப்பதாக அமைந்து விட்டது. முக்கியமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு மந்தகதியில் செயற்படுகையில் ஜே.வி.பி தனது அமைச்சுக்களின் வளங்களையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி சில நடவடிக்கைகளை மேற்கொண்டமையானது சு.க வினருக்கும் பெரும்சிக்கலை

**வேலவன்**

ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறாகக் கடந்த மூன்றாண்டு காலத்தில் ஜே.வி.பி யின் வளர்ச்சியானது மிகவும் துரிதமானதாக இருக்கின்றது. இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைவலியாக இருப்பினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தி அதன் எதிர்காலம் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றமையை மறுக்கமுடியாது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சியைப் பெரிதும் பாதிப்படையச் செய்ததில் ஜே.வி.பி பெரும் பங்கு வகித்திருக்கின்றது. அதாவது சமாதான முயற்சிகள் இன்று நெருக்கடி நிலையை அடைந்திருப்பதற்கு ஜே.வி.பி யின் இந்த வளர்ச்சி பெரிதும் காரணமாக அமைந்திருக்கிறது. இது ஜே.வி.பிக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கலாம் ஆனால் அது இலங்கையின் எதிர்காலம் குறித்த கேள்வியை எழுப்புகிறது.

o o o

## முஸ்லிம்களுக்கான தனியலகு விவகாரம் பொதுக்கட்டமைப்புடன் அகன்றுவிடும்

### முஸ்லிம் காங்கிரஸ் கவலை

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கான தனியலகு விவகாரம் பொதுக்கட்டமைப்புடன் விலகிப்போய்விடும் என்பதற்கான சமிக்ஞைகள் தென்படுவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்தக் கருத்தைச் சம்மாந்துறையில் வைத்துத் தெரிவித்தார்.. ஜே.வி.பி பேசுவதை வைத்துக் கொண்டு அது முஸ்லிம்களுக்காகப் பேசுகிறது என்ற அர்த்தத்தைக் கொடுத்துவிட முடியாது.

ஏனெனில் அதுவும் இந்த நாட்டில் உள்ள பேரினவாத அரசியலின் ஒரு அங்கம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

எனினும் அவர்களை முஸ்லிம் மக்களின் பேச்சாளர்களாக மாற்றி விட்டு முஸ்லிம் பிரதியமைச்சர்கள் மௌனமாயிருந்து வருகின்றனர்.

இது சகோதர தமிழ்ச் சமூகத்திற்கு முஸ்லிம்கள் தொடர்பில் தவறான பார்வையை வழங்கியுள்ளதாகக் ஹக்கீம் குறிப்பிட்டார். (32)

## ஆறு பல்கலைக்கழகங்களில் மாணவர் விடுதி அமைக்க நிதியொதுக்கீடு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், உட்பட்ட நாட்டின் ஆறு பல்கலைக் கழகங்களுக்கு மாணவர் விடுதி வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்காக 177 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக 3 தினங்கள் தமிழ், சிங்கள ஒலிபரப்பு இல்லை

(லண்டன்)

பி.பி.ஸி ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் பலவேலை நிறுத்தங்களை அறிவித்துள்ளன.

பி.பி.ஸி யின் தலைமை இயக்குநர் மார்க்தொம்சன் சுமார் 600 மில்லியன் டொலர் பணத்தைச் சேமிக்கும் முயற்சியில் சுமார் 15 வீத தொழிலாளர்களை வேலையில் இருந்து அகற்றுவதெனத் திட்டமிட்டிருப்பதை எதிர்த்தே இந்த வேலைநிறுத்தங்களை அறிவித்துள்ளன.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக எதிர்வரும் 23,31,1ஆம் திகதிகளில் சிங்கள, தமிழ் சேவைகள் ஒலிபரப்பப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

## கிறிஸ்தவம் உ/த 2005

திகதிகள் : மே மாதம் 17 ஆம், 18 ஆம், 19 ஆம் திகதிகள்

நேரம் : காலை 9 மணி முதல்

இடம் : கருணா நிலையம், A-9 வீதி,
(காவல்பணிமனைக்கு முன்னால்) கிளிநொச்சி.
(உணவும், தங்குமிட வசதியும் செய்துகொடுக்கப்படலாம்)

கட்டணம் : ரூபா 50 மட்டும்

தொலைபேசி இல:2285936

*அருட்திரு சாள்ஸ் டேவிட்,*
*தூய பவுலின் ஆலயம்,*
*கருணா நிலையம்,*
*கிளிநொச்சி,*

(6124)

ලංකා බැංකුව
இலங்கை வங்கி
Bank of Ceylon

BOC

## இலங்கை வங்கி

### பகிரங்க ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கைவங்கியின் பின்வரும் கிளைகளில் 30.04.04 ஆம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு, இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக்கிளையில் இம்மாதம் 28 ஆம், 29, ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகின்றோம்.

- ❖ யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை
- ❖ யாழ்.இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
- ❖ பருத்தித்துறை
- ❖ மானிப்பாய்
- ❖ சுன்னாகம்
- ❖ திருநெல்வேலி

**இந்நகைகள் மீட்கப்பட வேண்டிய கடைசித்திகதி 27.05.2005.**

**அறிவித்தலின்றி ஏலவிற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.**

15.05.05

உதவிப் பொதுமுகாமையாளர்
(வடபிராந்தியம்-யாழ்ப்பாணம்)

*(சி.11961)*

## கேள்வி அறிவித்தல்

01. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முத்தையன்கட்டுப்பகுதியில் கூட்டுறவுச் சபைக் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி–பொருத்தமான கட்டட ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கேள்வி கோரும் ஒப்பந்தக்காரர்இக்ராட் தரம்(எம்.–6) இல் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கேள்வி கோருவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000/= உம்,மீளளிப்பு வைப்புப் பணமாக (கேள்விப்பிணைப்பணம்) (160000/=உம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவுக் கச்சேரியிலுள்ள புனர்வாழ்வுக் கிளையில் 2005.05.30 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

02. பூரணப்படுத்தப்பட்ட ஏ,பீ கேள்விப்பத்திரங்களைத் தனித்தனியே மூடப்பட்ட தபாலுறையில் இட்டு அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென புனர்வாழ்வுக் கிளையில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ 2005.06.15 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

03. கேள்விகள் 2005.06.15 ஆம் திகதி புதன்கிழமை அன்றைய தினமே பிற்பகல் 3.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி கோரியோரோ அல்லது கேள்வி கோரியோரின் எழுத்துமூலமான பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

(திருமதி இமெல்டா சுகுமார்)
மாவட்ட கேள்விச்சபை தலைவரும்,
அரசாங்க அதிபரும்,
முல்லைத்தீவு மாவட்டம்.

*(சி.11884)*

## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன

பணிநிலை :- அலுவலக உதவியாளர் தரம்–04
(சிற்றூழியர் தரம்–04 /Peon Grade–04)

தகைமைகள் :-
i. க.பொ.த.(சாதாரண தர)தேர்வில் கணிதம் 42/கணிதம் II, தமிழ் உட்பட 04 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
ii. ஆண்பாலார் மட்டும்.

மாதாந்த ஊதியம் :- $\frac{1,870-2,870}{50X20}+6,000$

அகவை எல்லை :- 18–25 வருடங்கள்

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் யாழ்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக,நடுவப் பணியகத்திற்கு, 30.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

03. ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

04. நற்சாட்சிப் பத்திரங்கள்

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

*(சி.11967)*

# பாராளுமன்ற, சட்டமன்ற அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக் கூடாது

## சபாநாயகர் சட்டர்ஜி

பாராளுமன்ற- சட்டமன்ற அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக் கூடாது என்று பாராளுமன்ற சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி கூறியுள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் நானி பல்கிவாலா நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் "அதிகாரப் பகிர்வு" என்கிற தலைப்பில் ஒரு கருத்தரங்கை வழக்கறிஞர் சங்கம் நடத்தியது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாராளுமன்ற சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி பேசியபோது,

பாராளுமன்றம் , சட்டசபைக்கு என சில தனிப்பட்ட அதிகாரங்கள் இருக்கின்றன. நீதிமன்றங்களுக்கென சில சிறப்பு அதிகாரங்கள் உள்ளன. இப்படி இரு அமைப்புக்களுக்கும் உரிய அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இந்திய அரசியல் சட்டம் இவற்றை நிர்ணயித்துள்ளது.

இந்த அடிப்படையில் பாராளுமன்றமும். நீதிமன்றமும் ஒன்றையொன்று அனுசரித்து இணக்கமான உறவுடன் போய்க்கொண்டிருக்கின்றன. ஆனால் பாராளுமன்ற அதிகாரத்தை உச்ச நீதிமன்று ஆக்கிரமித்துக் கொண்ட அல்லது பறித்துக்கொண்ட சம்பவங்கள் ஒன்றிரண்டு அவ்வப்போது நடந்துள்ளன. தவிர்க்க முடியாத குறுக்கீடுகள் என்று சொல்லி பாராளுமன்ற அதிகாரத்தில் நீதிமன்றம் தலையிடுவதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

கடந்த ஏழு ஆண்டுகளில் இது போல இரண்டு முறை குறுக்கீடுகள் நடந்துள்ளன. 1998 ஆம் ஆண்டு ஒரு தடவை, மீண்டும் இந்த ஆண்டு ஒரு தடவை. இந்தச் சம்பவங்களில் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால தடையுத்தரவு என்பது பாராளுமன்றமும்- நீதிமன்றமும் அனுசரித்துப் போகவேண்டிய அரசியல் சட்ட வழிகாட்டுதல் தன்மையைக் கெடுத்துவிட்டது என்றார் சட்டர்ஜி.

# வெளிநாட்டு இந்தியரிடம் கடன்பெற்றுத் தருவதாக மோசடி!

கோடிக்கணக்கான பணமோசடி தொடர்பில் இந்தியப் பொலிசாரால் கைதான ஆதிகேசவன் எனும் சந்தேகநபர் தொடர்பான பரபரப்பு விபரங்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இறுதியாக வந்த தகவலின்படி மருத்துவக் கல்லூரி நிர்வாகத்தலைவர் ஒருவருக்கு 25 கோடி ரூபா கடன் வாங்கித் தருவதாகக் கூறி ஒரு கோடியே 17 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளதாக ஆதிகேசவன் மீது புதிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

...ஆதிகேசவன் வெளிநாட்டில் உள்ளவர்களிடம் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கித் தருவதாக இந்தியா முழுவதும் உள்ள தொழிலதிபர்கள் உட்பட ஏராளமானவர்களிடம் கோடிக்கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு மோசடி செய்துள்ளதால் மத்திய குற்றப்பிரிவுப் பொலிசார் கைது செய்து விசாரித்தனர். அப்போது ஆதிகேசவன் பல இடங்களில் முகவர்கள் வைத்துச் செயற்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆதிகேசவன் மோசடிக்கு உடந்தையாக இருந்தோரையும் பொலிசார் விசாரித்தனர். இதற்கிடையில் ஆதிகேசவன் மோசடி செய்த சுமார் ரூபா 50 கோடி பணத்தைச் சொந்த ஊரான சிறுவாடிக் கிராமத்தில் உள்ள விவசாயக் கிணற்றுக்குள் போட்டு வைத்திருப்பதாக அங்குள்ள சிலருக்குத் தகவல் கிடைத்ததாம்.இதனால் அவர்கள் விடிய விடிய அந்தக் கிணற்றில் இருந்த தண்ணீரை வெளியேற்றித் தேடிப்பார்த்தனர். ஆனால் பணப்புதையல் எதுவும் இல்லாததால் ஏமாந்தனர். இந்தத் தகவல் பொலிசாருக்குக் கிடைத்ததும் பொலிசார் விரைந்து சென்றதால் சிறுவாடியிலுள்ள சிலர் தப்பியோடிவிட்டார்களாம்.

# விஞ்ஞானிகளைப் பாராட்டினார் மன்மோகன்சிங்

இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவன (ஐ.எஸ்.ஓ) விஞ்ஞானிகள் டில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்தார்கள். கடந்தவாரம் கண்டோ சாட்-1 மற்றும் பி.எஸ்.எல்.வி.சி.6 ஆகிய இரண்டு ரொக்கெட்டுக்களை விஞ்ஞானிகள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய பின் மாதவன்நாயர் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்தது. அப்போது விஞ்ஞானிகளின் தனித் திறமையையும் அவர்களது சாதனையையும் பிரதமர் பாராட்டினார்.



விஞ்ஞானிகளுடன் மன்மோகன்சிங்

# ஆந்திராவில் தேர்தல் வன்முறை ஏழு தொண்டர்களும், இரு பொலிசாரும் பலி

ஆந்திர இடைத்தேர்தல் வேட்புமனுத்தாக்கலின்போது நடந்த வன்முறையில் பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தெலுங்கு தேசம் கட்சித் தொண்டர்கள் ஏழு பேர் பலியானார்கள். கல்வீசித் தாக்கியதில் அதிகாரி உட்பட இரண்டு பொலிசார் உயிரிழந்தனர்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டத்தில் பெனு கொண்டா தொகுதி தெலுங்குதேசம் கட்சி உறுப்பினர் பரித்தால ரவி படுகொலை செய்யப்பட்டதனால் இந்தத் தொகுதியில் அடுத்தமாதம் (ஜுன்) இரண்டாம் திகதி புதிய உறுப்பினர் தெரிவிற்காக இடைத்தேர்தல் நடக்கவிருக்கிறது.

இடைத்தேர்தலில் பரித்தால ரவியின் மனைவி பி.சுனிதா தெலுங்கு தேசம் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதனைத்தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் வேட்புமனுத் தாக்கல் செய்யச் சென்றபோது அலுவலகத்திற்கு வெளியே தெலுங்கு தேசக்கட்சித் தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் கூடி நின்றார்கள். வேட்பாளர் வருவதைக் கண்டதும் தொண்டர்கள் வாழ்த்துக் கோஷங்களை முழங்கியபடி முண்டியடித்துக் கொண்டு முன்னேறினர்.

இது தேர்தல் விதிமுறைகளை மீறிய செயலாக இருப்பதாகக் கூறிய பொலிசார் தொண்டர்களை வெளியேறும்படி கேட்டுக்கொண்டனர். இதனையடுத்து பொலிசார்மீது தெலுங்கு தேசக் கட்சியினர் கல்வீசித் தாக்கினார்கள்.

இதனால் பொலிசார் கண்ணீர் புகைவீச்சு, தடியடி நடத்தினர். அதன் பிறகும் வன்முறை கட்டுக்குள் அடங்காததால் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்.

இதில் தெலுங்குதேசக் கட்சியினர் ஏழு பேர் பலியாகினார்கள். இவர்களில் மூன்று பேர் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தும், மூன்று பேர் நெரிசலில் சிக்கியும் இறந்ததாகப் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் தொண்டர்களின் கல்வீச்சால் இரு பொலிசார் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய கீதத்தை மாற்றக் கோரிய வழக்குத் தள்ளுபடி

(புதுடில்லி)

இந்திய தேசிய கீதத்தில் மாற்றம் செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கை இந்திய உச்ச நீதிமன்று தள்ளுபடி செய்துள்ளது. அது விளம்பரம் தேடிக்கொள்வதற்காகப் போடப்பட்ட வழக்கு என்று கூறி வழக்கைத் தொடர்ந்தவருக்கு ரூபா பத்தாயிரம் அபராதம் விதிக்க உச்ச நீதிமன்று தீர்ப்புக் கூறியது.

சஞ்சீவ் பட்நாகர் என்பவர் கொடுத்திருந்த வழக்கில் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய தேசிய கீதத்தில் பாஞ்சாப், சிந்து, குஜராத்,மராட்டா என்ற வார்த்தைகள் வருகின்றன. சிந்து பகுதி இந்திய-பாகிஸ்தான் பிரிவினைக் குப்பிறகு பாகிஸ்தான் வசம் போய் விட்டது. எனவே இந்தியாவில் இல்லாத பகுதியான சிந்துப் பகுதி பெயர் இந்திய் தேசிய கீதத்தில் இருக்கத் தேவையில்லை.அதைநீக்கிவிட உத்தரவிட வேண்டும் எனக்கோரியே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்கே தள்ளுபடி செய்யப்பட்டதாகும்.

# இந்.வில் கள்ளனோட்டுக்கள் அச்சிடுவதைத் தடுக்க நடவடிக்கை!

"கள்ள பணத்தாள்கள் (நோட்டு) அச்சடிக்கப்படுவதைத் தடுக்க ரூபாய் பணத்தாள்களில் நவீன மாற்றங்கள் செய்யப்படும்" என்று இந்திய மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கணினி யுகம் தொடங்கிய பிறகு கள்ளப் பணத்தாள் அச்சடிப்பது மிகவும் எளிதாகிவிட்டது. ரூபாய் பணத்தாளகளைப் போன்ற புத்தம்புது பணத்தாள்களைச் சர்வசாதாரணமாக உருவாக்கி விடுகிறார்கள். இந்த நவீன தொழில்நுட்ப மோசடிக்கு முற்றுப் புள்ளி வைக்க இந்திய மத்திய வங்கி முடிவுசெய்துள்ளது.

இப்போது இந்தியாவில் பயன்படுத்தப்படும் 50 ரூபாய், 100 ரூபாய், 500 ரூபாய்,1,000 ரூபாய் பணத்தாள்கள் இன்னும் சில மாதங்களில் புதிய தோற்றத்துடன் வெளிவர இருக்கின்றன. கள்ள பணத்தாள் அச்சடிப்பதை முறியடிக்க இந்த மாற்றம் செய்யப்படுகிறது.

புதிய மாற்றங்களுடன் வர இருக்கும் ரூபாய் பணத்தாள்களை யாரும் எளிதில் பிரதிசெய்து கள்ள பணத்தாள் தயாரிக்க முடியாது. அதற்குரிய விசேட அம்சங்கள் அந்த பணத்தாள்களில் இடம்பெற்றிருக்கும். இது தவிர, அந்த பணத்தாள் எந்த வருடத்தில் அச்சடிக்கப்பட்டது என்ற விபரமும் குறிக்கப்பட்டிருக்கும். பார்வையற்றவர், ரூபாய் பணத்தாள்களை தடவிப்பார்த்து அதன் மதிப்பை கண்டு பிடிப்பதற்கான விசேட அம்சமும் புதிய பணத்தாள்களில் இடம்பெறும். ரூபாய் பணத்தாள்களின் தடிப்பும் அதிகரிக்கப்படுகிறது. ரூபாய் பணத்தாள்களை, இயந்திரங்கள் எளிதாக அடையாளம் காண்பதற்காக காந்த பாதுகாப்பு நூலிழைக் கோடு வெவ்வேறு அளவுகளில் காட்சியளிக்கும். மேலும் இந்த பணத்தாளை வேறு வேறு கேணங்களில் பார்க்கும்போது அதன் நிறம் நீலமாகவும், பச்சையாகவும் மாறும் வகையில் விசேட தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவிருக்கிறது எனவும் தெரிய வருகிறது.

# இரு தொகுதிகளில் இடைத்தேர்தல்

தமிழ்நாட்டில், காஞ்சிபுரம், கும்மிடிப் பூண்டி ஆகிய இரு தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் மரணம் அடைந்ததால் அவற்றிற்கான இடைத் தேர்தல் நேற்று நடைபெற்றது.

தமிழ்நாட்டில் இதுவரை நடைபெற்ற இடைத்தேர்தல்களில், இந்தத் தேர்தல்தான் மிகப்பெரிய அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இரு தொகுதிகளிலும் பல வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், அ.தி.மு.க, தி.மு.க வேட்பாளர்களுக்கு இடையேதான் கடும்போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.


# நகைச்சுவை நாடகப் போட்டியும் நாடக விழாவும்-2005

உலக நாடக தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவ்வாண்டு நகைச்சுவை நாடகப் போட்டியையும்,அது தொடர்பான விழாவினையும் யூலை நடுப்பகுதியில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு- கிழக்கின் கலை இலக்கியமன்றங்களிடையே இப்போட்டி இடம்பெறும்

போட்டி விதிகள் வருமாறு

*01 நாடகப் பிரதிகள் 45 நிமிடங்களுக்குள் மேடையேற்றப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.*

*02 தனிப்பட்ட நபர்களை, அரசியல் கட்சி சார்ந்த விடயங்களைத் தாக்குவதாகவோ, விமர்சிப்பதாகவோ நாடகங்கள் அமைந்திருத்தல் கூடாது.*

*03 உளநெருக்கடியால் பாதிக்கப்பட்டு இறுகிப்போயிருக்கும் மனங்களை விடுவிக்கும் பொருட்டாக நாடகங்கள் அமைந்திருத்தல் நன்று.*

*04 நாடகப் பிரதிகள் யூன் 1 ஆம் வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.*

*05 பரிசுக்குரியதாகத் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று நாடகங்களுக்கும் பணப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.*

மேலதிக விபரங்களுக்கு:- உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
வ.கி.மா,
திருகோணமலை,

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

**திரு.ஆர்.தியாகலிங்கம்,**
**செயலாளர்,**
**கல்வி அமைச்சு.**

(சி.11892)

## முதல் 15 ஓவர்களில் அதிக ஓட்டம்

## எடுப்பதை கட்டுப்படுத்த பயிற்சி – பாலாஜி



முதல் 15 ஓவர்களில் அதிக ஓட்டம் கொடுப்பதை நிறுத்த தீவிர பயிற்சி செய்வேன் என்று தமிழக வேகப்பந்து வீச்சாளர் பாலாஜி கூறியுள்ளார்.

சென்னையைச் சேர்ந்த இந்திய கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான எல். பாலாஜி. நேற்று முன்தினம் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில்; முதல் 15 ஓவரில் எதிரணித் துடுப்பாட்ட வீரர்கள் அதிக ஓட்டம் எடுக்கிற மாதிரி ஓட்டம் விட்டுக்கொடுப்பதைக் கட்டுப்படுத்த நான் தீவிர பயிற்சி செய்யவுள்ளேன். எனக்கு மூன்று மாதம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு கிடைத்துள்ளது. இந்த அவகாசம் என் திறமையை மேலும் வளர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

இந்திய அணியில் தொடர்ந்து இடம்பிடிக்கவேண்டும். இன்னும் நிறைய விக்கெட்டுக்களை கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. சமீபத்தில் பாகிஸ்தானுடன் இந்திய அணி மோதியபோது நாங்கள் கடுமையாகப் போராடினோம். ஆனாலும், அவர்கள் முதல் 15 ஓவரில் நிறைய ஓட்டம் எடுத்து விடுகின்றார்கள். எதிரணித் துடுப்பாட்ட வீர்கள் அப்படி ஓட்டம் குவிப்பதை கட்டுப்படுத்துகிற வகையில் பந்து வீசவேண்டும். அதற்குரிய விசேட பயிற்சியை நான் எடுத்துக்கொள்வேன்.

கான்பூரில் நான் வீசிய முதல் ஆறு ஓவரில் பாகிஸ்தான் வீரர்கள் 51 ஓட்டம் எடுத்து விட்டார்கள். இங்குதான் அப்ரிடி 42 பந்தில் 102 ஓட்டங்களைக் குவித்தார். இதுபோல் ஓட்டங்களை விட்டுக்கொடுக்காமல் விளையாடுவதில் நான் கவனமாக இருப்பேன் என்றார்.

## போட்டி நேரத்தை இழுத்தடித்தார் ஸ்மித்துக்கு 4 போட்டியில் ஆடத் தடை



போட்டி நேரத்தை இழுத்தடித்தார் என்ற குற்றச்சாட்டில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித்தலைவர் கிரேம் ஸ்மித்துக்கு நான்கு ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கத் தடைவிதிக்கப் பட்டுள்ளது. தென்னாபிரிக்கா அணி அண்மையில் மேற்கிந்தியத் தீவுகளுடனான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் மந்த கதியில் பந்து வீச்சை மேற்கொண்டது என்ற குற்றச்சாட்டில் இவருக்கு இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு வருடத்திற்கு முன்பும் மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான போட்டியில் இந்தத் தவறுக்காக சிமித்துக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதைத்தவிர அவரது ஊதியத்தில் 30 வீதத்தையும் பந்து வீச்சின்போது அளவுக்கு அதிகமாக முறையீடு செய்த குற்றத்துக்காக லாங்வெல்ட் நிற்றினிக்கு ஊதியத்திலிருந்து தலா 15 வீதத்தையும் அபராதமாக செலுத்த வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.கடந்த மாதம் இந்திய அணித்தலைவர் கங்குலிக்கும் இவ்வாறான தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காதலித்த பணியை கை விடுகிறார் ஷெப்பேர்ட்



பிரபல நடுவரான இங்கிலாந்தின் டேவிட் ஷெப்பேர்ட் ஜூலையில் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.சர்வதேச கிரிக்கெட் சபையால் (ஐ.சி.சி) எலைட் பேனலின் மூத்த நடுவர் டேவிட் ஷெப்பேர்ட் (64 - வயது). இவர் இதுவரை 92 டெஸ் மற்றும் 165 ஒருநாள் போட்டிக்கு நடுவ்ராக இருந்து உலக சாதனை படைத்துள்ளார். இந்தியா ,இங்கிலாந்து, தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கோப்பை தொடரின் இறுதிப்போட்டியில் நடுவராக இருந்துள்ளார். இவர் வரும் ஜூலையில் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.இதுகுறித்து ஷெப்பேர்ட் கூறுகையில்; ஒரு வீரராகவும் நடுவராகவும் 40 ஆண்டுகள் கிரிக்கெட்டில் இருந்துள்ளேன். காதலித்த இந்த பணியை கைவிடுவது மிகவும் கடினமாக இருக்கிறது. என்றார். 1965 முதல் 1979 வரை இங்கிலாந்தின் கவுண்டி அணிகளில் ஒன்றான குளோசெஸ்டர்ஷயரில் விளையாடியுள்ளார். அடுத்த மாதம் ஜமேக்காவில் நடக்கவிருக்கும் மேற்கிந்தியதீவு, பாகிஸ்தான் இடையிலான இரண்டாவது போட்டியே இவர் நடுவராக இருக்கும் கடைசி டெஸ்ட். ஜூலை 12இல் ஓவல் மைதானத்தில் நடக்கும் இங்கிலாந்து அவுஸ்திரேலியா இடையிலான ஒருநாள் போட்டியுடன் ஷெப்பேர்ட் முழுமையாக ஓய்வு பெறுகிறார்.

## இந்திய பயிற்சியாளர் பதவிக்கு டொம்மூடியே சரியானவர் – ஸ்ரீவோ



இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சி யாளராக அவுஸ்தி ரேலியாவைச் சேர்ந்த டொம் மூடி தேர்வு செய் யப்படுவதே மிகச் சரி யானதாக இருக்கும் என ஸ்ரீவோ தெரிவித் துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக் கெட் அணியின் முன் னாள் தலைவர் ஸ்ரீவோ தற்போது இந்தியா வந் துள்ளார். அவர் நேற்று முன்தினம் கொல் கொத்தாவில் நிருபர் களுக்குப் பேட்டி அளிக்கும்போது,

நான் விளையாடும்போதே பரபரப்புடன், ஒரு வித வெற்றி வேட்கையுடன் ஆடக்கூடிய வீரராகத் திகழ்ந்தார். எனவே, எந்த நாட்டு அணிக்கும் நல்ல பயிற்சியாளராக விளங்கக் கூடிய தகுதி அவருக்கு உண்டு.

அதற்காக நான் கிரேக் செப்பலை குறைத்து மதிப்பிடுவதாக கருதிவிட வேண்டாம். அவ ருக்கு சிறந்த பயிற்சியாளராக இருக்கக்கூடிய அளவுக்கு அனைத்து தகுதிகளையும் கொண் டுள்ளார் என்றார்.


## அரையிறுதியில் ஷரபோவா



ரோம் நகரில் நடைபெறும் இத்தாலிய ஓபன் டென்னிஸ் தொடரில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா அரையிறுதிப் போட்டிவரை முன்னேறியிருப்பதுடன் பிரான்ஸ் ஓபனில் தவறவிடப்பட முதல்தர வரிசையை அண்மித் துள்ளார். அவ் எலினா பொவினாவை 6-2,6-2, என்ற செட் கணக்கில் வென்றுள்ளார்.

அவர் இறுதிப் போட்டியில் பெற்ற ஸ்க்னைடரிரைச் சந்திப்பார். இறுதிப் போட்டியில் அவர் வெற்றி பெற்றால் உலகத் தரவரிசையில் முதலாமிடத்தை எட்டிவிடுவார்.

## பிரபல கால்பந்து வீரர் ரொனால்டோவின் இரண்டாவது திருமணபந்தமும் முறிந்தது




பிரபல கால்பந்து வீரர் ரொனால்டோ டேனியாலா திருமண நிச்சயதார்த்தம் முறிவடைந்துள்ளது. பிரேசில் நாட்டைச்சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் ரொனால்டோ தற்போது ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார். மூன்று முறை கால்பந்து சங்கத்தில் (பிபா) சிறந்த விளையாட்டு வீரர் விருதைப் பெற்றவர்.

இவருக்கும் பிரேசில் நாட்டு பெண்கள் கால்பந்து அணியின் வீராங்கனை மிலன்டோமிங்க சுக்கும் கடந்த 1999ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. அவர்களுக்கு ரொனால்டு என்ற மகனும் உள்ளார். இந்நிலையில் எம்.டி.வி.நடிகையும், முன்னாள் மாடல் அழகியுமான டேனியாலா சிகாரிலாவுக்கும், ரொனால்டோவுக்கும் காதல் ஏற்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி காதலர் தினத்தன்று இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

பரீஸ் அருகே அரண்மனையில் நடந்த இந்த விழாவில் 200 சிறப்பு விருந்தினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். இதற்கு மட்டும் ரூபா எட்டு கோடி செலவானது. இந்நிலையில், ரொனால்டோ, காதலி டேனியாலா திருமண நிச்சயதார்த்தம் முறிந்துவிட்டது. இருவரும் பிரிந்து வாழ்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எதற்காக பிரிந்தார்கள் என்ற தகவல தெரிவிக்கப்படவில்லை. ஆனால், முதல் மனைவியிடம் இருந்து முறைப்படி விவாகரத்து பெற ரொனால்டோ மறுத்துவிட்டதாகவும், அதனால் டேனியாலா கோபமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.




## பூநகரி கோட்டபெருவிளையாட்டு; இறுதிப் போட்டியின் இறுதிநாள் இன்று

பூநகரிக் கோட்டமட்ட பெரு விளையாட்டின் இறுதிப்போட்டி பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்றுத்தொடக்கம் நடைபெற்று வருகிறது. இப்போட்டியில் பூநகரி வடபுல தென்புல பிரதேசக் குழுக்கள் மோதுகின்றன.

இப்போட்டியில் வலைப்பந்து, கூடைப்பந்து, கைப்பந்து, உதைபந்து, கிறிக்கெட், எல்லே, கபடி என்பன இடம் பெற்றுவருகின்றன. (34)

## வவுனியா வடக்கு பிரதேச பெருவிளையாட்டு முடிவுகள்

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான பெருவிளையாட்டுப்போட்டி முடிவுகள் வருமாறு;

கபடி (ஆண்கள்)- முதலாம் இடம்- மத்தியவிளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம்-புரட்சி விளையாட்டுக்கழகம், கபடி (பெண்கள்)- முதலாம் இடம்- மத்தியவிளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், எல்லே( ஆண்கள்) முதலாம் -இடம்- மத்தியவிளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் உதயசூரியன் விளையாட்டுக்கழகம், எல்லே (பெண்கள்) முதலாம் இடம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம்- மத்திய விளையாட்டுக்கழகம்., உதைபந்தாட்டம் (ஆண்கள்)- முதலாம் இடம்- மத்திய விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் பாரதி விளையாட்டுக்கழகம். உதை பந்தாட்டம் (பெண்கள்) முதலாம் இடம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம்- மத்தியவிளையாட்டுக்கழகம், வலைப்பந்தாட்டம்- முதலாம் இடம் மருதம் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் புரட்சி விளை யாட்டுக்கழகம், கரப்பந்தாட்டம் (ஆண்கள்) முதலாம் இடம் பாரதி விளை யாட்டுக்கழகம், இரண்டாம் இடம் ஐக்கிய விளையாட்டுக்கழகம், கரப்பந்தாட்டம் (பெண்கள்) முதலாம் இடம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் புரட்சி விளையாட்டுக்கழகம். (10)

## கோட்ட மட்ட எல்லே போட்டி

கரைச்சிக் கோட்டப் பாடசாலை களுக்கிடையிலான எல்லே போட்டி நாளை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியானது முதல் நடத்தப்படவிருந்து பிற்போடப்பட்ட போட்டியாகும். அதேபோட்டியை நாளை நடாத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. எனவே, இப்போட்டி யில் ஏற்கனவே பதிவு செய்த பாட சாலை போட்டியாளர்களை தவ றாது உரிய நேரத்திற்கு வருகை தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)

## சண்டிலிப்பாய் பிரதேச வி.போட்டி


சண்டிலிப்பாய் பிரதேச செயல கத்தின் தடகள விளையாட்டுப் போட்டிநடைபெறவுள்ளது.இன்று பிற்பகல் இரண்டு முப்பது மணிக்கு ஆரம்பமாகும் இவ் விளையாட்டுப் போட்டி சண்டி லிப்பாய் பிரதேசசெயலர் திருமதி றூபினி வரதலிங்கம் தலைமை யில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (சு)

## வெங்கல செட்டிகுளம் பிரதேச மெய்வல்லுநர் போட்டிகள்

வெங்கல செட்டிகுளம் பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கிடையே யான மெய்வல்லுநர் போட்டி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. செட்டிகுளம் பிரதேசசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இம்மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் சி. சண்முகம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்ட னர். (10)

## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள்

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஆதரவுடன் கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம் நடைமுறைப்படுத்திவரும் பிரபா முன்பள்ளி திறனாய்வு விழாவும் தரம் ஒன்றிற்கு சென்ற மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வும் கடந்த ஆறாம் திகதி அன்று மாலை 2.00மணிக்கு கலைவாணி விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்றது. மங்கல விளக்கினை வட்டக்கச்சி அரசியல்துறைப் போராளி ஆரணியும்,இராமஜெயமும் தேசியக் கொடியினை வட்டக்கச்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடர், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை கிளி. கிழக்கு புனர்வாழ்வு இணைப்பாளர் சி. சிறீரஞ்சினியும், புனர் வாழ்வுக்கொடியினை பணியாளரான குமுதினியும், முன்பள்ளி மேம்பாட்டுக் கொடியினை முன்பள்ளி மேற்பார்வையாளர் ஜெ. கௌசலாவும், பிரபா முன் பள்ளிக் கொடியினை முன்பள்ளி ஆசிரியர் சத்தியேஸ்வரியும் ஏற்றி வைத் தனர். அதனைத் தொடர்ந்து ஆசியுரையினை புனர்வாழ்வு நிறுவன செயலாளர் கு.குமாரசாமியும் தலைமையுரையினை-நேசராசாவும் நிகழ்த்தினர். (12)



### சிந்தனைக்கு

எமது தேசத்தின் வளத்தின் அடிப்படையில் எமது தேசிய பொருளாதாரம் சுய நிறைவு காண வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15-05-2005
தொலைபேசி/ தொலைநகல் 060-2213244 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எதிரிகள் போடும் அடிக்கற்கள்!

யாராக இருப்பினும், தமிழ் மக்களின் உரிமைகளை மறுப்பவர்கள் தமிழீழம் நோக்கிய தமிழ் மக்களின் பயணத்திற்கு அடிக்கற்கள் போடும் பணியைப் புரிபவர்களாகவே இருப்பார்கள். அதாவது இனப்பிரச்சினைத்தீர்விற்கு தமிழீழம் என்பதே ஒரே தீர்வு என்பதற்கு அவர்கள் செய்யும் பங்களிப்பாகவே இது அமையும்.

தமிழ் மக்கள் தமது உரிமை தொடர்பாக முன்வைக்கும் அனைத்து யோசனைகள், திட்டங்கள் என்பனவற்றை நிராகரித்தல் என்பதே ஜே.வி.பியின் நிலைப்படாகவுள்ளது. இதேபோன்று தமிழர் தாரப்பின் கோரிக்கைகள் முஸ்லிம்காங்கிரசால் நிராகரிக்கப்படுவது வழமையானதாகியுள்ளது.

இந்தவகையில் தற்பொழுது முக்கிய விவகாரமாகியுள்ள பொதுக்கட்டமைப்பையும் ஜே.வி.பியும் முஸ்லிம் காங்கிரசும் நிராகரித்துள்ளன. தம்மைச்சந்தித்த ஜப்பானின் விசேட துாதுவர் யதூசி அகாசியிடம் இவர்கள் தம் நிராகரிப்பை /எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

பொதுக்கட்டமைப்பானது விசேட அதிகாரங்களைக் கொண்டதொரு தனி அதிகாரத் தொகுதியல்ல. சுனாமி அனர்த்த உதவி நிதித் திட்டங்களைக் கண்காணித்தல்மட்டுமே அதன் பணியாகும். ஆனால் சிறிலங்கா பேரினவாதிகள் இதனை ஒருபெரும் அதிகார அலகு போன்று பெரிது படுத்திவருகின்றனர். இத்தகையதொரு கட்டமைப்பு விடுதலைப்புலிகளைப் பலப்படுத்திவிடும் என அவர்கள் கூச்சல் இடுகின்றனர்.

ஆனால் அத்தகைய கூச்சல்கள் அர்த்தமற்றவை. பொதுக்கட்டமைப்பானது விடுதலைப்புலிகளின் கைகளில் சர்வதேச நிதியுதவியைக் கொண்டு சென்றுசேர்க்கும் அமைப்பல்ல. இதனை சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே தரப்பு கூட ஊர்ஜிதம் செய்துள்ளது.

ஆனால் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுதல் என்பது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கிய முன்னேற்றத்திற்கான ஒரு நடவடிக்கையாக அமையக் கூடியதாகும். அதாவது இனப்பிரச்சினைத் தீர்வில் சிறிலங்கா அரசிற்கும்- விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை சகல மட்டத்திலும் கொடுக்கக்கூடியதாகும்.

சிறிலங்காவிற்கான அமெரிக்கத்தூதுவர் "அமைதிப்பேச்சுக்களில் ஒருவகையான முன்னேற்ற நடவடிக்கைகளாவே பொதுக்கட்டமைப்பை நாங்கள் எண்ணுகின்றோம்" எனத் தெரிவித்துள்ளமையும் இதன் அடிப்படையிலேயே ஆகும். அதாவது அடுத்தகட்ட நடவடிக்கைக்கு இது உதவும் என்பதே ஆகும்.

ஆனால் ஜே.வி.பி, தேசிய பிக்குமார் முன்னணி போன்ற சிங்களப் பேரினவாத சக்திகள் பொதுக்கட்டமைப்பு தமிழீழத்தின் முதற்படி என்று கூறுகின்றன. ஆனால் உண்மையில் பொதுக் கட்டமைப்பிற்குக் காட்டும் எதிர்ப்பே தமிழீழத்திற்கான படிக்கல்லாக அமையக் கூடும்.

ஏனெனில் பொதுக்கட்டமைப்பு அரசியல்அதிகாரங்களைக் கொண்டதொரு அமைப்பல்ல. இன்னொருபக்கம் இக்கட்டமைப்பை விடுதலைப்புலிகள் ஏற்க முன் வந்தமை நல்லதொரு வாய்ப்பாகும் புலிகள் இவ்வாறு இறங்கிவந்தமைக்கு மக்களுக்கான உதவிகள் பெறப்படுதலில் அவர்கள் காட்டிய அக்கறையே காரணமாகும். இத்தகையதொரு நிலையிலேயே சர்வதேச நாடுகள் பல பொதுக் கட்டமைப்பை ஆதரித்துள்ளன.

ஆனால் பொதுக் கட்டமைப்பை நிராகரிப்பவர்கள் இனி இனப்பிரச்சினை தொடர்பாகவோ அன்றி வேறு பிரச்சினைகள் குறித்தே விடுதலைப்புலிகளுடன் பேசுவதோ,தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான இணக்கப்பாடொன்றிற்கு வருதலோகடினம். ஏனெனில் பொதுக்கட்டமைப்பை-உருவாக்குவதற்காகப் புலிகள் இயக்கம் கீழ் இறங்கிவந்தது போன்று இனிவேறு எச்சந்தர்ப்பத்திலும் இறங்கி வரப்போவதில்லை; இறங்கி வரவும் முடியாது.

ஏனெனில் பொதுக்கட்டமைப்பு என்பது மனிதாபிமான தேவையின் பாற்பட்ட தொன்றாகும். ஆனால் இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு என்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைதொடர்பானதும், பாதுகாப்புத் தொடர்பானதுமான விடயமாகும். இதில் விட்டுக்கொடுப்பிற்கோ, பேரம்பேசுவதற்கோ எதுவுமே இல்லை.

ஆகையினால் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இணக்கம் காணமுடியாத அரசாங்கத்துடன் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகப்பேசுவதில் பயன்ஏதுமில்லை. அதாவது பொதுக்கட்டமைப்பு தோல்வியுறுமானால் அதற்கு அப்பால் இனப்பிரச்சினைக்குப்பேச்சுவார்த்தை மூலம் அரசியல்தீர்வு காணலாம் என எவரும் நம்பிக்கை கொள்வது கானல் நீரில் நம்பிக்கை கொள்வது போன்றே இருக்கும்.

# பொதுக்கட்டமைப்பை தடுத்து நிறுத்த பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### -ஜாதிகசங்க சம்மேளன அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் பொதுக் கட்டமைப்பை தடுத்து நிறுத்துவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கையெடுக்க வேண்டுமென ஜாதிக சங்க சம்மேளன அமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கும் விடயத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது தமக்கு நம்பிக்கையில்லையெனத் தெரிவித்துள்ள ஜாதிக சங்க சம்மேளனத்தின் தலைவர் கலகொடவத்த ஞானசார தேரர், சனநாயக ரீதியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ செயற்பட வேண்டியகாலம் தற்பொழுது ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது அமைப்பு நாளை கொழும்பிலும், கண்டியிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் அரசாங்கத்தினால் மாத்திரமே வழங்கப்படவேண்டுமெனவும், விடுதலைப் புலிகளாலோ அல்லது அவர்களுக்கு ஆதரவு வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களாலோ வழங்கப்படக் கூடாதெனவும் ஜாதிக சங்க சம்மேளனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

# ஐ.தே.க வின் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் இனப்பிரச்சினை குறித்து எதுவும் கூறப்படவில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்திற்கான நிகழ்ச்சி நிரலிலும், பிரச்சார வெளியீடுகளிலும் இனப்பிரச்சினை குறித்து எந்தவிடயமும் உள்ளடக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிக்கோத்தாவில், கட்சியின் தலைவரும், சனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன்போது, சனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முறைகள் குறித்தும், இந்தப் பிரச்சாரத்தின்போது வெளியிடப்படவிருக்கும் பிரச்சாரக் கருத்துக்கள் குறித்தும் விரிவாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சார நிகழ்ச்சி நிரலிலோ, பிரச்சாரக் கருத்துக்களிலோ நாட்டின் இனப்பிரச்சினை குறித்தோ, பிரச்சினைக்கான தீர்வு குறித்தோ எந்தவொரு விடயமும் உள்ளடக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

சனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்கென, சீட்டுக்கட்டுக்கள் போன்ற அட்டைகளில் பிரச்சாரக் கருத்துக்கள் பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளபோதும், இந்தப் பிரச்சார அட்டைகளிலும் இனப்பிரச்சினைத் தீர்வுகுறித்து எந்தக் கருத்துட தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

இதேவேளை, பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர்களும், இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அக்கறைகொள்ளாத கடும்போக்கு உறுப்பினர்கள் என்றும் தெரியவந்துள்ளது. தீவிரமடைந்திருக்கும் சிங்களப் பேரினவாதப் போக்குக்கு ஈடு கொடுக்கும் வகையிலேயே தமது சனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்கப்போகிறது என்பது இதிலிருந்து தெரியவந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பொதுக்கட்டமைப்புக் குறித்து கருத்துக்கூற உதவி வழங்கும் மாநாட்டில் நேரம் ஒதுக்கப்படவில்லை

### -ஜாதிகஹெல உறுமய குற்றச்சாட்டு

கண்டியில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் பொதுக் கட்டமைப்புக் குறித்துக் கருத்துத் தெரிவிக்க நேரம் ஒதுக்கப்படவில்லையென ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கான அழைப்பிதழும், மாநாட்டின் நிகழ்ச்சி நிரலும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சி நிரல் குறித்தே, ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஈ.பி.டி.பி., ஜே.வி.பி., சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இதன்போது, உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் பொதுக்கட்டமைப்புக் குறித்துக் கருத்துத் தெரிவிப்பதற்கு நேரம் ஒதுக்கப்படாதது குறித்து இந்தக் கட்சிகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இதனால், பொதுக்கட்டமைப்புக்கான தமது எதிர்ப்பினை இந்த மாநாட்டில் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

எனவே, உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்யப்பட்டு, பொதுக் கட்டமைப்புக் குறித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித்தரப்பட வேண்டும் என்றும், அவ்வாறு செய்யப்படாவிட்டால், இந்த மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாகவும் இந்தக்கட்சிகள் கூட்டாகக் கருத்துத் தெரிவித்துள்ளன.

# சிவராம் கொலைக்கு உரிமை கோரும் அமைப்பை கண்டுபிடிக்க நடவடிக்கை-பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் கொலைக்கு உரிமைகோரியிருக்கும் அமைப்பினைக் கண்டுபிடிப்பதற்கு தாம் நடவடிக்கையெடுக்க விருப்பதாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சிவராமை தாமே கொலைசெய்ததாகக் கூறி தேரபுத்தா பய என்ற. சிங்கள அமைப்பொன்று அறிக்கையொன்றை அண்மையில் வெளியிட்டிருந்தது.

இந்த அமைப்பின் அறிக்கையின் பிரதியொன்று தமக்கு கிடைக்கப் பெற்றிருப்பதாகத் தெரிவித்துள்ள சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ,

இந்த அமைப்பினைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்கத் தீர்மானித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சிவராம் கொலை செய்யப்பட்டு இரண்டு வாரம் முடிவடைந்துள்ள நிலையில் கொலையாளிகள் எவரையும் சிறிலங்கா காவல்துறையினர் கண்டுபிடிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## அடையாளம் காணப்படாத 65 உடல்களை அடக்கம் செய்யத் தீர்மானம்

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தத்தினால் மரணமடைந்தவர்களுள் அடையாளம் காணப்படாத 65 சடலங்களை கொழும்பு கனத்தை மயானத்தில் அடக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மரணமடைந்தவர்கள் என்ன மதத்தை சேர்ந்தவர்கள் என இனம் காணப்படாததால் சர்வமத பிரார்த்தனைகளின் பின்னர் அந்த சடலங்கள் அடக்கம் செய்யப்படவுள்ளன. இந்தச் சடலங்கள் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் மரபணுக்கள் எடுத்து பாதுகாக்கப்படும் என்றும் எதிர்காலத்தில் அவர்களை இனம்காணும் தேவை ஏற்படும் பட்சத்தில் அவை உதவியாக அமையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலங்களுள் பல வெளிநாட்டவர்களும் உள்ளடங்குவர் என நகர மரண விசாரணை அதிகாரி எட்வட் அஹங்கம தெரிவித்துள்ளார். இந்த இறுதிச்சடங்கு நடவடிக்கைகள் பிரித்தானிய தூதுவராலயத்தின் செலவில் செய்யப்படவுள்ளன. இதன்போது இறுதிச்சடங்குகளில் வெளிநாட்டு தூதுவராலயங்களின் அதிகாரிகளும் பங்கு பற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படையினரின் துப்பாக்கிச் சூட்டிலேயே சந்திவெளியில் பொதுமகன் பலியானார்

## பாராளுமன்ற உறுப்பினர் சாட்சியம்

(மட்டக்களப்பு)

படையினரின் நேரடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே மட்டக்களப்பு சந்திவெளியில் பொது மகன் ஒருவர் பலியானார் என பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சந்திவெளி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான வாக்குமூலங்கள் தொடர்ந்தும் பெறப்பட்டு வருகின்றன.பொலிஸ் அத்தியட்சகர் கபில ஜெயசேகரவின் தலைமையிலான 20 பேரைக் கொண்ட சுயாதீன ஆணைக்குழு இந்த வாக்குமூலங்களை பதிவு செய்கிறது.

இந்தக்குழுவினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குமூலங்கள் நிறைவு செய்யப்பட்டன.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜெயாநந்த மூர்த்தி மற்றும் அரியநேத்திரன் ஆகியோர் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அவர்களின் வாக்கு மூலங்கள் தமிழ்மொழியிலேயே பதிவு செய்யப் பட்டன.

## வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மீன்பிடி படகு வழங்கும் வைபவம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பிரதேச கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த சொலமன் என்பவரின் நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரை யகத்தால் அறுபத்தைந்து இலட்சம் ரூபா பெறுமதியான 15 மீன்பிடிப் படகு இயந்திரம், வலைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

காலை 10.00 மணிக்கு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தாளையடிக் கடற்கரையில் இந்நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த சொலமன், ஜேர்மன் நகர முதல்வர் மற்றும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் பிரங் உட்பட பலர் கலந்து கொள்ள வுள்ளனர்.

## தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

சிறிலங்கா விமானப்படை விடுதிக்கு அருகாமையில் சந்தேகத் திற்கிடமான முறையில் நடமாடிய தாகக் குற்றம் சுமத்தப்பட்டு தமிழ் இளைஞர் ஒருவர் விமானப்படையி னரால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பீட்டர் விமல் சுந்திரசேகரம் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். தற்போது அவர் விசாரணைக்காக கொள்ளுப் பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### பொதுக்கட்டமைப்பு...

சமூகம் உறுதுணையாக நிற்கும். சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் மிக நெருக்கடியான காலகட்டம் இது. போரும் இல்லாமல் உண்மையான அமைதிப் பேச்சுகளுமற்ற சூழல் நிலவி வருகிறது. விரைவில் இந்நாட்டில் நிலையான, வழமையான சூழல் உருவாகும்.

கொழும்பு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக கொலைகள் நடைபெற்று வருகின்றன. நாம் எந்தத் தரப்பையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறையாக செயற்படுத்த வேண்டும் என்பதே எங்களது கவலை.

அரசியல் தலைவர்கள் தங்களது பாதுகாப்புகளை முன்னைவிட பலப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. பல்வேறு குழுக்களிடையே உள்ள அவநம்பிக்கைகள் அதிகரித்துள்ளதால் படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் சனாதிபதி சந்திரிகாவின் நிலையை பாராட்டுகிறோம். 'விரைவில் பொதுக்கட்டமைப்பிற்கு அவர் இறுதிவடிவம் அளிப்பார். பொதுக் கட்டமைப்பு தொடர்பாக சந்தேகங்களையும், அச்சங்களையும் எழுப்புகிறவர்களுடன் உரிய முறையில் பேசி இணக்கமான தீர்வை சனாதிபதி சந்திரிகா ஏற்படுத்துவார் என்று நாம் நம்புகிறோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய போது, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவும் வகையில் விரைவில் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும் என்று நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் இருக்கிறது.

இருந்தபோதும் பொதுக்கட்டமைப்பை சிறிலங்கா அரசு உருவாக்காவிட்டாலும் மாற்று ஒழுங்கமைவு ஒன்றை உதவி வழங்கும் நாடுகள் மேற்கொள்ளும்.

கண்டியில் நடைபெறுகின்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் தமது தரப்பையும் அழைக்கவில்லை என்று விடுதலைப்புலிகள் தெரிவித் தனர். யார் அழைக்கப்பட வேண்டும் என்பது சிறிலங்கா அரசின் முடிவு. ஆனாலும் புலிகளை அம் மாநாட்டிற்கு அழைப்பதற்கான உரிய காரணங்கள் உள்ளன. இருந்தபோதும் அரசின் முடிவுகளை நாங்கள் மதிக்கிறோம். ஜப்பான் மற்றும் இதர உதவி வழங்கும் நாடுகள் சிறிலங்காவின் உள் அரசியல் விவகாரங்களில் ஒருபோதும் தலையிடாது என்றார்.

இதேவேளை, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உடனான சந்திப்பின் பின் கிளிநொச்சியில் ஊடகவியலாளருக்கு பேட்டியளித்த யசூசி அகாசி, இலங்கைத் தீவக ஆழிப்பேரலை மீளமைப் பிற்கான பொதுக்கட்டமைப்பு, முடங்கி நிற்கும் அமைதிப் பேச்சுக்கள் தொடர ஒரு உந்துசக்தியாக இருக்கும் என்றார்.

அவர் மேலும் கூறியதாவது; அமைதி முயற்சிகள் மற்றும் பொதுக்கட்டமைப்பு குறித்து இன்றைய சந்திப்பில் தமிழ்ச்செல்வனுடன் ஆலோசனை நடத்தினோம். கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் குறித்தும் விவாதித்தோம். தற்போதைய சமாதானச் சூழல், அரசியல் படுகொலைகள், யுத்த நிறுத்த மீறல் ஆகியவை குறித்து தமிழ்ச்செல்வன் விளக்கினார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செயற்படுத்துவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் குறித்தும் தமிழ்ச்செல்வன் எடுத்துக் கூறினார். ஆழிப்பேரலை மீளமைப் பிற்கான பொதுக்கட்டமைப்பு மிகவும் பயனுள்ளது. முடங்கி நிற்கும் அமைதி முயற்சிகளுக்கு உந்து சக்தியாக இருக்கும் பொதுக் கட்டமைப்பு தொடர்பான கூடுதல் விவரங்களை குறித்து அரச தரப்பிடமும் பேசவுள்ளோம். தற்போது சிறிலங்கா அரசு பொதுக்கட்டமைப்பை உருவாக்க முன்வந்துள்ளது. ஆனால் ஜே.வி.பி உள்ளிட்ட சிலர் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சில கேள்விகளை எழுப்பி இருக்கிறார்கள். அவர்களுடனான சந்திப்பின் போது பொதுக்கட்டமைப்பின் அவசியம் குறித்து உரிய விளக்கம் அளிக்கப்படும். அவர்களும் பொதுக்கட்டமைப்பை ஏற்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

## இராணுவத்திற்கு தகவல் வழங்குபவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

(கொழும்பு)

நீர்கொழும்பில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார். ஓந்தாச்சி மடத்தைச் சேர்ந்த எஸ்.ரவிச்சந்திரன் என்ற இளைஞரே சுடப்பட்டுவைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டுள்ளார்.

நகைக் கடையொன்றில் வேலை செய்யும் இவர் இராணுவத்திற்கு தகவல் கொடுப்பவர் எனப் பொலிசாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

### கண்டியில்....

வது நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதற்கு எதிராக தாம் கடும் எதிர்நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (32)

### பொதுக்கட்டமைப்பை எதிர்த்து....

தலைவர் தபர அமில தேரர் தெரிவித்துள்ளார். நாளையும், நாளை மறுதினமும் இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் கண்டியில் இடம்பெறவிருக்கின்றது. இதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பொதுக் கட்டமைப்பை ஸ்தாபித்துக் கொடுக்கும் சதி முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

எனவே அரசின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே தேசிய பிக்கு முன்னணி இந்த சத்தியாக்கிரகத்தினை நடத்துவதாக தெரிவித்துள்ளது.

### பிரச்சினையை...

வடைந்து வெளியேறிய பின்னர் சனாதிபதியின் தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மாத்திரம் கலந்தாலோசனையில் ஈடுபட்டனர். இதன்போது பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியை விலக்கி விட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை பெறுவது குறித்து ஆராயப்பட்டது எனினும் இதற்கு வலுவான ஆதரவு இருக்கவில்லை.

இந்த நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நாட்டை ரணிலிடம் ஒப்படைத்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக்காணலாம் எனக் குறிப்பிட்டார் இதனையடுத்து ஏனையவர்கள் வியப்பை வெளியிட்ட போதும் சனாதிபதி எந்த ஒரு வெளிப்பாட்டையும் காட்டவில்லை. இறுதியில் இது நல்ல யோசனை, ரணிலிடம் அரசாங்கத்தை பொறுப்பளித்து விட்டு அடுத்த நாள் நான் பதவி விலகிவிடுவேன் என அவர் கூறியதும் அனைவரும் தமது ஆட்சேபனையை வெளியிட்டனர். இந்த நிலையில் குறித்த கூட்டம் முடிவு எதுவும் இல்லாமல் நிறைவு பெற்றது. (32)

### பொதுக்கட்டமைப்பை..

இந்த விவகாரம் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகாவுக்கு நெருக்கமானவர்களான ஜயந்த தனபால, ஹரீம் பீரிஸ் உள்ளிட்டவர்களுடன் சனாதிபதி சந்திரிகா கலந்துரையாடலொன்றை நடாத்திய தாகவும் இதன்போதே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

### தெற்கில்....

கின்றது. அது மட்டுமல்ல, இந்த சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஜப்பான் தன்னுடைய பங்கை செலுத்துகின்றபடியால் அவர்களுக்கு இன்றுள்ள நெருக்கடியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம். முக்கியமாக தற்பொழுது யுத்த நிறுத்த சூழல் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருப்பதை அவர்களுக்கு நாங்கள் தெளிவாக்கியிருக்கின்றோம். நிச்சயமாக மிக விரைந்து எங்கள் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இந்த இராணுவ நெருக்கடிகள், படுகொலை முயற்சிகள் போன்றவை நிறுத்தப்பட்டு எங்களுடைய மக்களுக்கு இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது போன்ற மீளக் குடியமர்வுக்கும், இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்குமான சூழலை ஏற்படுத்தித் தராதுவிட்டால் மக்கள் கொந்தளிப்பான நிலைக்குத் தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாமல் இருக்கும்.

ஏனெனில், அண்மையில் அமைதி வழியில் - சனநாயக வழியில் எங்களுடைய மக்கள் எதிர்ப்புக்களை காட்ட முனைந்தபோதும் இராணுவத் தரப்பு தனது வன்முறையை அவர்கள் மீது பிரயோகித்து மக்கள் கொல்லப்பட்டும், பெருமளவான மக்கள் காயமடைந்ததுமான நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றது. அதைவிட மூத்த பத்திரிகையாளர்கள், மூத்த அறிஞர்கள், பொதுமக்கள் கொல்லப் படுகின்ற நிகழ்வும் தென் தமிழீழத்தில் இந்த ஆயுதக் குழுக்களால் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வையும் நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இது முழுக்க படைத் தரப்போடு இணைந்து இயங்கும் ஆயுதக் குழுக்களுடைய செயற்பாடு என்பது வெளிப்பட்டிருக்கின்றது.

ஆகவே, யுத்த நிறுத்த உடன்படிக்கைகளில் வடக்குக்கிழக்கில் ஆயுதக் குழுக்கள் செயற்பட அனுமதிப்பதில்லை. அவர்களுடைய ஆயுதங்கள் களையப்பட்டு வடக்கு-கிழக்கைவிட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை. இதை மீறிப் படைத் தரப்பு ஒரு நிழல் யுத்தத்தை எங்கள் மக்கள் மீது தொடுத்திருக்கின்றது. அதைவிட யுத்த நிறுத்த சூழலை நெருக்கடிக்குள்ளாக்கி மீண்டும் பழைய நிலைக்கு வருகின்ற சூழலைக் கொண்டுவர முயன்று கொண்டிருப்பதை இன்று நாங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

ஆகவே, சர்வதேச சமூகம் இதில் விரைந்து சிறிலங்காவுக்கு அழுத்தத்தை பலமாகப் பிரயோகிக்க வேண்டும் என்பதும், நிலைமைகளைச் சீராக்க வேண்டுமென்றால் படைத் தரப்பும் இலங்கை அரசாங்கமும் தம்மை மாற்றி கொள்ள வேண்டும் என்பதைத்தான் கூடுதலாக நாம் இன்று வலியுறுத்தியுள்ளோம்.

□ இது தொடர்பாக ஜப்பான் தூதுவர் தங்களுக்கு ஏதேனும் விடயங்களை தெரிவித்தாரா?

ஜப்பான் தூதுவர் நிலைமைகளைப் புரிந்து கொள்வதாகவும், முடிந்தளவு இலங்கை அரசாங்கத்திறகும், தென்பகுதியிலும் தாங்கள் இது பற்றி எடுத்து விளக்குவதாகவும், தங்களால் முடிந்த அழுத்தத்தைப் பிரயோகிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தீர்வை முன்வைக்க இந்த மூன்று வருடமாக நாங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோற்றுபோன நிலைமை. அவர்களுக்கு சுட்டிக் காட்டியிருக்கின்றோம். குறிப்பாக, இந்த சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக்கூட நான்கு மாதங்களுக்கு மேலாக சர்வதேச சமூகத்தின் மனிதாபிமான உதவிகள் எதுவுமே இங்கு கொண்டு வரமுடியாத ஒரு சூழலையும் இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தியிருப்பதையும் தற்பொழுது சனாதிபதி இந்தப் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்து இடுவதாகவும், விரைவில் கொண்டு வருவதாகவும் அறிவிப்புக்களைச் செய்வதானது முழுக்க முழுக்கவே சர்வதேச உதவிகளை கவர்ந்திழுப்பதற்கான உத்தியே தவிர மக்களுக்கு நன்மை செய்யும் நோக்கமாக இது தெரியவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

இந்தப் பொதுக்கட்டமைப்பு கொண்டு வந்தால்கூட ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தி எங்களுடைய மக்களுக்கு நன்மையளிக்கின்ற சூழலை உருவாக்குவார்களோ என்பது இன்றைக்கு கேள்விக் குறியாகத்தான் இருக்கின்றது என்பதை அவர்களுக்கு நாங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

□ பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் ஏதாவது நிபந்தனைகளை விதிக்கின்றதா?

பொதுக்கட்டமைப்பை பொறுத்தவரை எங்களுடைய தரப்பில் ஒரு பிரச்சினையும் இல்லை. ஏனெனில், நோர்வேத்தரப்பு தந்த ஆலோசனையை எங்களுடைய தலைமைப்பீடம் ஏற்கனவே ஏற்றுக் கொண்டு அங்கீகரித்துவிட்டது. ஆனால், இலங்கை சனாதிபதியோ, இலங்கை அரசோ இதை இழுத்தடித்து இன்றைக்கு தெற்கிலே பெரிய எதிர்ப்புப் போல் ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கி அதைப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய விடயமல்ல, எங்களுடைய மக்களுக்கான ஒரு மனிதாபிமான உதவியைச் செய்வதற்கான ஒரு கட்டமைப்பு. இதுதான் எங்களுடைய மக்களின் பிரச்சினை அல்ல. இது உடனடிப் பிரச்சினை. ஏனெனில், அண்மைக்காலத்தில் நடந்த பேரனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவி தேவை. ஆனால், நான்கு ஐந்து மாதங்களாக இழுத்தடிப்பு செய்துவிட்டு இப்பொழுது அதற்கான அறிக்கைகளை விடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆகவே, சர்வதேச சமூகம் விரைந்து தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என்பதைத் தான் இன்று நாங்கள் அவர்களுக்கு தெளிவாக் கியிருக்கின்றோம் என்றார்.

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசி நேற்றுக்காலை 10.00 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி வந்தடைந்தார்.

தூதுவர் அடங்கிய குழுவினரை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் வரவேற்றார்கள். தொடர்ந்து, கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் யசூசி அகாசிக்கும், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்றது. இப்பேச்சுக்கள் நண்பகல் 12.00 மணிவரை நீடித்தது.

மேற்படி சந்திப்பில் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். (தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.